October 2011
Issue : 46

# செங்கதிர்

இலட்சியம் இல்லாமல் இலக்கியம் இல்லை

இலங்கையிலிருந்து வெளிவரும்
கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழ்



சா. சக்திதாசன் (அக்கரைச் சக்தி)








ஐப்பசி 2011
வீச்சு : 46

60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண சேவை





**தங்கள் தேடல்**

**உள் நாட்டிலா? வெளிநாட்டிலா?**

**கணக்கியலாளரா? பொறியியலாளரா? வைத்தியரா?**

**வேறு தொழிலாளரா?**

**எந்நாடாக இருந்தாலும், எத்தொழிலாக இருந்தாலும்**

**சுலபமானச் சுயதெரிவு முறையில் தெரிவு செய்திட**

**குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே!**

**விவரங்களுக்கு:**

திங்கள், புதன், வெள்ளி, மாலை 4:30 – 7:30 மணிக்கு உள்ளேயோ,
சனி, ஞாயிறு நண்பகல்
11:00 – 2:00 மணிக்கு உள்ளேயோ
சர்வதேச – சகலருக்குமான, மூத்த – புகழ் பூத்த, தனிநபர் நிறுவனம்,
திருமண ஆற்றுப்படுத்துநர்
வேல் அமுதனைத் தொடர்புகொண்டு விசாரித்தறிக!

**தொலைபேசி**

4873929 / 2360488 / 2360694

**சந்திப்பு**

முன்னேற்பாட்டு ஒழுங்குமுறை

**முகவரி**

8–3–3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு
எதிராக, நிலப்பக்கம், 33ஆம் ஒழுங்கை வழி)
55ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு – 06

*வாடிக்கையாளர் புதிய வரவுகளின் முக்கிய விவரங்களை வேல் அமுதனின் அலுவலக நேரம் தொலைபேசி ஊடாக அறிந்துகொள்ளலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கதிர்

தோற்றம் 30.01.2008

46

ஐப்பசி 2011(தி.வ.ஆண்டு-2042)

4வது ஆண்டு

ஆசிரியர்:
**செங்கதிரோன்**
தொ.பேசி/T.P -065-2227876
077-2602634
மின்னஞ்சல் / E.mail-
senkathirgopal@gmail.com

துணை ஆசிரியர்:
**அன்பழகன் குரூஸ்**
தொலைபேசி/T.P - 0777492861
மின்னஞ்சல்/E.mail -
croos_a@yahoo.com

**தொடர்பு முகவரி :**
**செங்கதிரோன்**
**திரு.த.கோபாலகிருஸ்ணன்**
19, மேல்மாடித் தெரு,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Contact :**
**Senkathiron T.Gopalakrishnan**
19, Upstair Road,
Batticaloa,
Sri lanka.

**கவிதை**


- படைத்தவனைப் பழிவாங்குவேன் 26
- இழப்பு / சுவடுகள் 32
- தட்டுங்கள் மேளத்தை 45


**கட்டுரை**


- சொல் வளம் பெருக்குவோம்-27 30
- கதை கூறும் குறள் - 24 33


**கதை**


- பெட்டிஷன் பிறந்தது (சிறுகதை) 21
- கண்றாவி (குறுங்கதை) 29
- மீண்டும் ஒரு காதல் கதை - 08 (தொடர் நாவல்) 39

- **ஆசிரியர் பக்கம்** 02
- **அதிதிப் பக்கம்** 03
- **சின்னது சிரிப்பானது உண்மையானது - 3** 27
- **நீத்தார் நினைவு** 28
- **கதிர்முகம்** 46
- **விசுவாமித்திர பக்கம்** 52
- **நினைவிடைதோய்தல்** 61
- **விளாசல் வீரக்குட்டி** 63
- **வானவில்** 64


ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

இலங்கையில் 2004 முதல் ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை சகலரும் அறிந்ததே. வாசிப்பு என்பது வெறுமனே தகவல்களை அறிவதற்காக மட்டுமல்ல. வாசிப்பு ஒரு மனிதனின் மனதைச் செழுமைப்படுத்துகின்றது. வாசிப்பு சமூகத்தொடர்பை ஊக்குவிக்கின்றது. வாசிப்பு வாழ்க்கையில் தேடல் முயற்சிகளைத் தொடரவைக்கிறது. வாசிப்பு பல சமூக - பொருளாதார - அரசியல் - கல்வி - கலை - கலாசார - ஆத்மீக - விஞ்ஞானம் என பலவிடயங்களை அறியவைத்து அவ்வாறு அறிந்தவற்றை வாழ்க்கையில் பிரயோகிக்கும்படி செய்து பல வெற்றிகளைக் கொண்டு வருகிறது. மொத்தத்தில் வாசிப்பே ஒரு மனிதனை முழுமையாக்குகிறது. ஆனால், இன்று நுகர்வுக் கலாசாரமும் - உலகமயமாக்கமும் - தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியும் எம்மிடையே வாசிப்புப் பழக்கத்தை அருகச் செய்துவிட்டன. இதனாலேயே வன்முறைகளும் - குற்றச் செயல்களும் - துர்நடத்தையும் இளம் சமுதாயத்தினரிடையே அதிகரித்து வருகின்றன. இதனைத்தடுக்கும் பெரும் பொறுப்பு பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு. காரணம் இளையோர்களை நல்வழிப்படுத்தக் கூடிய - இளையோர்களுடனான நேரடித்தொடர்பு அவர்களிடமே உண்டு. கல்வி வணிகமயமாகிவிட்ட இன்றைய காலச் சூழலில் மாணவர்களை வெறுமனே பாடவிதானங்களை மட்டும் நெட்டுருப்பண்ணும் பொறிகளாக மாற்றாமல் பாடவிதானங்களுக்கு அப்பால் அவர்கள் நல்ல நூல்களைத்தேடி வாசிக்கத் தூண்டும் பொறிமுறைகளையும் வீட்டிலும் - கல்விக் கூடங்ளிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே **'செங்கதிர்'** இன் எதிர்பார்ப்பு.

- **செங்கதிரோன்**

**அன்பானவர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்கி "செங்கதிர்" இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் உதவுங்கள்.**
**—ஆசிரியர்—**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிதிப்பக்கம்



**'செங்கதிர்'** இதழின் இம்மாத அதிதி 15.10.2011 அன்று தனது அறுபதாவது அகவையை நிறைவு செய்து மணி விழாக் காணும் கவிஞர் **'அக்கரைச்சக்தி'** (சா.சக்திதாசன்) ஆவார்.

## என் கவி வரலாறு (1967 முதல் 2011 வரை)

**- அக்கரைச் சக்தி**

### குடும்பப் பின்னணி:

கிழக்கு மாகாணத்தின் தென்கோடியில் கல்முனை என்னும் நகரின் கண் அமைந்துள்ள அழகிய ஊரான பாண்டிருப்பே எனது பிறந்தகமாகும். எனது பெற்றோரின் பிறந்தகமும் அதுவே. எனது தந்தையாரான சைவப் புலவரும் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் நீண்ட காலம் பணியாற்றி உப அதிபராகவுமிருந்த திருவாளர் சே.சாமித்தம்பி ஆசிரியரின் சேவைக்காக எம் அனைவரினதும் வதிவிடமாக அக்கரைப்பற்று விளங்கியது. எனக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருக்கின்றனர். யான் யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த ஆயுர்வேத டாக்டர் பாக்கியலெட்சுமி அவர்களைத் திருமண் செய்து மூன்று ஆண் மக்களுக்குத் தந்தையானேன்.

### கல்விப் பின்னனி:

எனது ஆரம்பக் கல்வி அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வி மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ண சங்க சிவானந்தா வித்தியாலயத்திலும் நிறைவேறியது. பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் இயந்திரவியல் பொறியியலாளராகப் பட்டம் பெற்ற நான் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் பட்டயப் பொறியியலாளராகவும் இலங்கை தன்னியக்க வாகனப் பொறியியலாளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் உள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் அனுபவங்கள்:

தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் எனது முதலாவது தொழிலான தராதரப்பத்திரமற்ற கணித விஞ்ஞான ஆசிரியப் பணி இரண்டு ஆண்டுகள் நீடித்தது. அங்கு பணியாற்றும்போதே நான் பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்தேன். பட்டப்படிப்பு பூர்த்தியானதும் அப் பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்திலேயே நான்கு ஆண்டுகள் போதனாசிரியராகப் பணியாற்றினேன். 1983 ஜூலை மாதம் நிகழ்ந்த அசம்பாவிதத்திலிருந்து நானும் துணைவியும் உயிர் தப்பிய பின் யாழ்ப்பாணம் சென்ற நான் வாழைச்சேனை காகித ஆலைக் கூட்டுத் தாபனத்தில் உதவிப் பொறியியலாளராகப் பதவி பெற்றேன். அங்கே இரண்டு மாதங்களே பணிபுரிந்த நான் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் வடிவமைப்புப் பகுதியில் பொறியியலாளராகப் பணியை ஆரம்பித்தேன். அப்போது தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுதப் போராட்டம் காரணமாக தொழிற்சாலைப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக மாறியதன் காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டது. ஆறு வருடங்களே அங்கு பணியாற்ற முடிந்தது. எனினும் அப் பதவியில் இருந்து கொண்டே யாழ்ப்பாணம் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் எட்டரையாண்டுகள் பகுதி நேர விரிவுரையாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் விரிவுரையாளராக இரண்டு வருடங்களும் பணியாற்றினேன். பின்பு யுத்த நிலை தீவிரமடைந்ததன் விளைவாக அங்கிருந்து குடும்பத்துடன் வெளியேறி மட்டக்களப்புக்கு வந்தேன். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பயிராக்கவியல் துறையில் தற்காலிக உதவி விரிவுரையாளராக இரண்டு வருடங்கள் பணியாற்றிக் கொண்டே இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்புக் கற்கை நிலையத்தில் வருகைதரு கல்வியாளராகப் பணி புரிந்தேன். அப்போது சீமெந்து தொழிற்சாலைப் பதவியைச் சுய விருப்பத்தின் பேரில் துறந்துவிட்டு கொழும்புக்குக் குடும்பத்தோடு இடம்பெயர்ந்தேன்.

இங்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தில் தற்காலிக செய்முறை காட்டுநராக மூன்று வருடங்கள் பணியாற்றிய பின் மட்டக்குளியில் உள்ள உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவகத்தில் இருண்டு வருடங்கள் வருகைதரு விரிவுரையாளராகவும் ஒருவருடம் ஒப்பந்த அடிப்படையில் உள்வாரி விரிவுரையாளராகவும் பணிபுரிந்தேன். அதன்பின் பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள நிர்மாண இயந்திர உபகரணப் பயிற்சி நிலையத்தில் கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டப் பொறியியலாளராக ஒன்றரை வருடங்கள் பணிபுரிந்தேன். அதன்பின்பு மகரகமவிலுள்ள தேசிய கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவகத்தில் வளவாளராக இணைந்து இரு வருடங்கள் செயற்பட்ட நான் தற்போது தொழில்நுட்பக் கல்வித்துறையில் தமிழ்மொழி மூல செயற்றிட்ட அதிகாரியாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்றேன். இரத்மலான வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவர்க்கும் டிப்ளோமா கற்கை நெறியை தொடரும் மாணவர்க்கும் ஆக்கத் தொழில்நுட்பம், தன்னியக்க வாகனத் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளை நடத்திய அனுபவமும் எனக்குண்டு. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்புப் பிராந்திய நிலையத்தில் தொடர்ந்தும் வருகைதரு கல்வியாளராக இருக்கிறேன்.

## கவி வரலாறு:

யான் கவியுலகில் 1967ம் ஆண்டு காலடி வைத்தேன். சிவானந்த வித்தியாலயத்தில் பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் போது பாடசாலையில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் மூன்றாம் இடம்பெற்ற நான் **'விபுலானந்தனுக்கு நான் விடுத்த ஓலை'** எனத் தலைப்பிடப்பட்ட அக் கவிதையை ஏனைய போட்டியாளர்களுடன் மேடையில் வாசித்த போது கிழக்கிலங்கையின் கவிச்சக்கரவர்த்தியாக இருந்த நீலாவணன் அவர்கள் நடுவராக இருந்தார். அங்கு அவரின் பிரசன்னமும் விமர்சனமும் எனக்குக் கவிபாட ஊக்கம் கொடுத்தன. மேலும் முன்னேற வேண்டும் என அவர் கூறிய கூற்று இப்போதும் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பின்பு சிவானந்த விடுதி மேற்பார்வையாளராயிருந்த திரு.ஜெகநாதன் ஆசிரியர் அவர்களுக்குப் பிரியாவிடை நடைபெற்ற போது அவரை வாழ்த்திப் பாராட்டு மடல் எழுதி வாசித்தேன். இதுவே யான் பாடிய முதலாவது பாராட்டு மடலாகும். பின்பு சிவானந்த வித்தியாலய அதிபர் பேரறிஞர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் பிரியாவிடைக்கும் பாராட்டு மடல் வாசித்தேன். சிவானந்த விடுதி மாணவர் சங்கத்தில் இணைப் பத்திராதிபராய் தெரிவு செய்யப்பட்ட நானும் திரு.ந.நல்லராஜாவும் இணைந்து **'சிவானந்த ஒலி'** என்னும் பெயரில் சிறு கல்லச்சுச் சஞ்சிகையை வெளியிட்டோம். அதில் சுவாமி நடராஜானந்தாவுக்கு அச்சஞ்சிகையை அர்ப்பணமாக்கும் பாடலை எழுதினேன். **'அணுக்குண்டும் ஐதரசன் குண்டும்'** என்ற கட்டுரையையும் எழுதினேன். இவ்வாறு எழுதத் தொடங்கிய நான் சமயம் கிடைக்கும் போதெல்லாம் தொடர்ந்து எழுதி வந்தேன். அக்கரைப்பற்றில் உறைந்து அருள்பாலிக்கும் பத்திரகாளியம்மனுக்கு **'காளியம்மன் கலிவெண்பா'** பாடி ஆலய விழாவில் அரங்கேற்றினேன். இலங்கை வானொலியின் கிராம சஞ்சிகைநிகழ்ச்சியொன்றில் இக் கவிதை அக்கரைப்பற்றில் வைத்து ஒலிப்பதிவு செய்யப்பட்டு வானொலியில் ஒலிபரப்பாகியது. **'வானொலி மஞ்சரி'** சஞ்சிகையில் நான் எழுதிய **'கொழும்பு சென்றேன்'** என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்காவியமும் **'அக்கரைப் பற்றுச் சந்தை'** எனும் கவிதையும் இன்னும் சில பாக்களும் பிரசுரமாயின. **'கலைவாணன்'** இதழில் **'விலைமதிப்படைவாய் தமிழா'** எனும் தலைப்பில்எழுதிய கவிதை பிரசுரமாகியது. வானொலி நிகழ்ச்சியொன்றுக்கு நான் எழுதியனுப்பிய கவிதை புகழ் பெற்ற ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீட் அவர்களால் வாசிக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் கலாசார எழுச்சிக்குப் பங்காற்றிய விபுலானந்த சபையில் இணைந்து கொண்ட நான் அச்சபையின் வெளியீடான **'யாழோசை'** சஞ்சிகையின் ஆசிரியராகி இரு பிரதிகளை என் கையெழுத்திலேயே வெளியிட்டேன். அதிலும் எனது **'எழுகின்றாய் இளந்தோழா'** மற்றும் **'சுவாமி விபுலானந்தருக்குச் சமர்ப்பணம்'** ஆகிய கவிதைகள் இடம்பெற்றன. விபுலானந்த சபைக்கீதமும் என்னாலியியற்றப்பட்டு மேடையில் பாடப்பட்டது. மாதந்தோறும் சபை நடாத்திய வளரும் கலைஞர் அரங்கு நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு பற்றிக் கவிதைகளை மேடையேற்றினேன். பாரதி இளம் விவசாயிகள் கழகம் அக்கரைப்பற்றில் நடாத்திய மகாகவி பாரதியார் நினைவு விழாவில் **'பாரதி ஒரு ஆத்மீகவாதி'** எனும் மகுடத்தில் இசைப்பாடல் ஒன்றை யாத்துப் பாடினேன். **'பாரதி யார்?'** என்ற தலைப்பிலும் கவிதை வாசித்தேன். முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் நினைவு தினத்தை விபுலானந்த சபை கொண்டாடியபோது காந்தீய அகிம்சைப் போராளி தியாகி இராஜகோபால் , ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்த ஜீ மகராஜ் , முன்னைநாள் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை அதிபர் அன்பன் நடராஜா ஆகியோர் மேடையில் பிரசன்னமாயிருக்க **'வித்தக விபுலானந்த நீ பிறந்திலையேல்'** எனும் தலைப்பில் கவி வாசித்தேன். புகழ் பெற்ற நாவலாசிரியர் அமரர்.கே.டானியல் அவர்கள் பிரசன்னமாயிருக்க அவர் எழுதிய **'பஞ்சமர்'** நாவலை கவிதையில் விமர்சனம் செய்தேன். அக்கரைப்பற்றில் பொலிஸ் அதிபராயிருந்து இடமாற்றம்பெற்ற கிருஷ்ணசுவாமி அவர்களில் சேவையைப் பாராட்டி நான் இசையோடு பாடிய வாழ்த்துப் பா பெரும் வரவேற்பைப் பெற்றது. இதேபோல் பிரிவுக்காரியாதிகாரியாயிருந்தவரும் சபை நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்து ஆலோசனை வழங்கியவருமான திருவாளர் ஜெயரெத்தினம் அவர்களுக்கும் பாராட்டு மடல் எழுதினேன். அரும்பணி புரிந்து அக்கரைப்பற்று மக்களின் மனங்களை வென்ற வைத்திய கலாநிதி பொ.அருணகுலசிங்கம் அவர்களுக்கு நான் எழுதிய பாராட்டு மடல் விபுலானந்த சபைச் செயலாளர் திரு.சு.வினாயகமூர்த்தி அவர்களால் வாசிக்கப்பட்டு அளிக்கப்பட்டது. இதனை வைத்திய கலாநிதி தன் சிங்கப்பூர் இல்லத்தில் வைத்திருந்ததாக அறிந்தேன். எனக்கு இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்து ஊக்கமளித்த எனது தந்தையரின் மாணவர்களாகிய திரு.சி.சிவஞானமூர்த்தி ஆசிரியரையும் திரு.வே.சந்திரசேகரம் ஆசிரியரையும் இன்றும் நினைவு கூருகின்றேன். சைவப் புலவர் வீ.ரி.செல்லத்துரை அவர்களையும் பாராட்டி வாழ்த்துப் பா பாடியுள்ளேன். சிவானந்த வித்தியாலயத்தின் பொன் விழாவை முன்னிட்டு நான் பாடிய **'சிவானந்த வித்தியாலய பொன் விழா புகழ்பத்து'** எனக்கு மிகவும் மன நிறைவை அளித்த பாமலராகும்.

தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் ஆசிரியப்பணி புரிந்தபோது சரஸ்வதிப்பூஜையன்று முதன்முதலாக அங்கு கவிதை பாடினேன். அங்கு சங்கீத ஆசிரியராக விளங்கிய திருவாளர். சி.கணபதிப்பிள்ளை அவர்களோடு பழகக் கிடைத்தது எனது கவி பாடும்திறனை மேலும் வளர்த்தது. அன்னார் ஒரு இயற்கைக் கவிஞராகவும் முருக பக்தராகவும் இருந்தமை என்னைத் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமியின் மீதும் உகந்தை முருகன் மீதும் இசைப் பாடல்களையும் கவிதைகளையும் இயற்றி அரங்கேற்றம் செய்யவும் துணை செய்தது. இவற்றுள் திருக்கோயில் வரலாற்றை **'திருக்கோயில் சரிதப்பா'** எனும் பெயரில் பாவாக இயற்றி ஆலயத் திருவிழாவில் அரங்கேற்றினேன். சங்கீத ஆசான் தலைமையில் நானும் தவராஜா ஆசிரியரும் கவிதைகளை பாடசாலை மாணவர் மத்தியில் அரங்கேற்றினோம். நானே ஒரு முறை தலைமைக் கவிஞராகவிருந்து மாணவர்களின் கவியரங்கிற்கு நடுநிலை வகித்தேன். **'புதுமைக் கபிலன்'** எனும் தலைப்பில் மாணவர்களைக் கொண்டே கவிதை உரையாடலை நடாத்தினேன். இவைகளால் தூண்டப்பட்ட என் மாணவிகளுள் ஒருவரான திருமதி.ஜெகதீஸ்வரிநாதன் ஆசிரியை அவர்கள் இப்போது கவிக்கோகிலம் எனும் கௌரவப் பட்டத்துடன்தம்பிலுவில் ஜெகா எனும் பெயரில் கவிதைகளையும் மெல்லிசைப் பாடல்களையும் ஆக்கி வருவதோடு புகழ்பெற்ற கவிஞர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டு வருகிறார். மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் குழாம் நடாத்திய பாராட்டு விழாக் காலத்திலும் நான் இயற்றிய கவிமடல்கள் வாசிக்கப்பட்டன. பாடசாலையை விட்டு நான் விலகியபோது **'பிரிவு'** எனும் தலைப்பில் நான் வாசித்த கவிதை கேட்டு மாணவர்கள் பலர் கண்ணீர் விட்டனர். எனக்கு ஆசிரியர் குழாம் அளித்த பாராட்டு வைபவத்தில் ஏற்புரையாக ஒரு நீண்ட கவிதையே வாசித்தேன். அறப்போர் அரியநாயகம் வதிந்த தம்பிலுவில் பதியில் அரசியல் மேடையிலும் நான் தோன்றிக் கவிபாடினேன். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறை மீண்டு வந்தபோது அவருக்குத் தம்பிலுவிலில் நடந்த வரவேற்பு விழாவில் உணர்ச்சிக் கவிஞரைப்பற்றி நான் பாடிய எழுச்சிக் கவிதையை கவிஞர் கேட்டு வாங்கிச் சென்று விட்டார். இதேபோல் அக்கரைப்பற்றில் தமிழர் கூட்டணித் தலைவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுத் தந்தை செல்வநாயகம் பங்கு பற்றிய வரவேற்பு விழாவில் தந்தையையும் தலைவர்களையும் வரவேற்றுக் கவிதைகள் பாடினேன். தமிழ் ஏந்தல் ஈழவேந்தனைவரவேற்றுப் பாடிய கவிதை அவர் வெளியிட்ட **'தமிழ்மண் காப்போம் தாயகம் மீட்போம்'** எனும் நூலின் பின்பக்க அட்டையை அலங்கரித்தது. அக்கால கட்டத்தில் சுதந்திரன் பத்திரிகையிலும் என் கவிதைகள் பிரசுரிக்கப்பட்டன. இவற்றுள் **'எங்களூர் தம்பிலுவில்'** எனும் கவிதை மிகுந்த வரவேற்பைப் பெற்றது. சுதந்திரன் பத்திரிகை சார்பில் நடைபெற்ற நீலாவணன் நினைவு வெண்பாப்போட்டியில் இரண்டாம் பரிசு எனக்குக் கிடைத்தது. தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த சி.மு.இராசமாணிக்கம் அவர்களின் மறைவு குறித்த இரங்கற் கூட்டம் கல்முனையில் நடைபெற்றபோது தமிழரசுத் தொண்டர் ஈ.வேல்முருகு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இரங்கற் கவி வாசித்தேன். அப்போது மேடையில் தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமாயிருந்தவரும் இலங்கையின் ஒரேயொரு தமிழ் எதிர்க்கட்சித் தலைவருமான திரு.அமிர்தலிங்கம் திருமதி.மங்கையற்கரசி அமிர்தலிங்கம் முன்னாள் செனட்டர் மு.மாணிக்கம் திரு.சாம்.தம்பிமுத்து , திருமதி.கலா தம்பிமுத்து என்போர் இருந்தனர். எனது கவிதையை அவர்கள் மெச்சிப்பாராட்டியது இங்கு குறிப்பிடத்தக்கது. வீரகேசரி பத்திரிகையில் யாழ் நங்கை எனும் பெயரில் திருமதி.அன்னலட்சுமி இராசதுரை அவர்கள் ஆரம்பித்து நடாத்திய மாணவர் உலகு பகுதியில் தொடர்ச்சியாக விஞ்ஞான அடிப்படையிலான கவிதைகளை எழுதினேன். அத்தனை ஆக்கங்களையும் பிரசுரித்த மாணவர் உலகு எனக்கு **'அக்கரைச்சக்தி'** எனும் புனையெரையும் சூட்டிப் புகைப்படத்துடன் என்னை ஒரு சிறந்த இளங்கவிஞராக வீரகேசரி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியது. இதே பெயருடனேயே இன்றும் நான் கவியெழுதி வருகின்றேன்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இயங்கிய தமிழ்ச்சங்கத்தில் கொண்ட ஈடுபாட்டால் தமிழ்ச் சங்கத்திற்கென ஒரு கீதம் இயற்றி அப்போதைய சங்கத்தின் பெருந் தலைவரும் தமிழ்ப்பேரறிஞருமான பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தனின் அங்கீகாரத்திற்கு அனுப்ப அதை அவர் ஏற்றுக் கொண்டு சங்கத்தின் கீதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஐம்பது வருடமாக தமிழ்ச் சங்கத்திற்குக் கீதமொன்று இருக்கவில்லை. ஆகவே தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாவில் நானே கீதத்தைப்பாடி அரங்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்கக் கிடைத்தது வாழ்வில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும். இன்று வரை அக்கீதமே அமுலிலுள்ளது. தமிழ்ச்சங்க வெளியீடான **'இளங்கதிர்'** சஞ்சிகையில் இக் கீதம் பிரசுரிக்கப்பட்டும் வருகிறது. அநேக தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளில் கவிதைகள் பாடி அரங்கேற்றியுள்ளேன். இவைகளுள் மறக்கமுடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி **'இனியொரு விதி செய்வோம்'** எனும் தலைப்பில் தான்தோன்றிக் கவிராயர் என அழைக்கப்பட்ட சில்லையூர் செல்வராசன் தலைமையில் நடந்த கவியரங்கமாகும். அதில் நான் பாடிய எழுச்சிக் கவிதை சபையோராலும் தலைமைக் கவிஞராலும் மெச்சப்பட்டது. குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் பஜனைப் பாடகராக இருந்த எனக்கு குமரப்பெருமான் மீது **'குறிஞ்சிக் குமரன் குயிற்பத்து'** எனும் பாடல் பாடி அரங்கேற்றவும் வாய்ப்புக் கிடைத்தது. ஆலய பரிபாலன சபையின் மாணவர் அமைப்பின் வெளியீடான **'இந்து தர்மம்'** சஞ்சிகையிலும் எனது பக்திப் பாமாலைகள் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழகப் போதனாசிரியராக இருந்தவேளை நண்பரும் மிருதங்க வித்துவானுமாகிய திரு.கணேசலிங்கம் அவர்களின் அழைப்பிற்கிணங்க கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றிலும் சில்லையூர் செல்வராசனின் தலைமையிலேயே **'புதுயுகம் படைப்போம்'** எனும் தலைப்பில் கவி பாடினேன். இக்காலகட்டத்திலே கொழும்புத் தமிழ்ச் சங்கம் அகில இலங்கைரீதியாக நடத்திய கவிதைப்போட்டியில் நான் எழுதிய **'நாவலர் பணிகள்'** எனும் தலைப்புடைய கவிதை சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டது. அதை இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராகவும் கவிஞராகவும் விளங்கிய நாவற்குழியூர் கலாநிதி நடராசன் அவர்கள் தலைமையில் தமிழ்ச் சங்கத்தில் பாடினேன். பரிசிலும் பெற்றுக் கொண்டேன். அதன் காரணமாக 1979ம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டு வானொலிக் கவியரங்கில் பங்கு பற்றி **'வேனிலான் தந்த விருது'** எனும் தலைப்பில் கவி வாசிக்க வாய்ப்புக் கிடைத்தது. நாவற்குழியூர் நடராசனே இதற்கும் தலைமை வகித்தார். கண்டி சைவ மகாசபையின் ஆண்டு விழாவில் பேராசிரியர் மௌனகுரு தலைமையில் **'பொய்யாயினவெல்லாம் போயகல'** எனும் தலைப்பில் கவிதை அரங்கேற்றம் செய்தேன். அதன்போது பிரசன்னமாயிருந்த பேராசிரியர் வித்தியானந்தன் பற்றி நான் கவிதையில் எடுத்துரைத்தபோது சபையினர் கைதட்டி ஆரவாரம் செய்தது இன்னும் என் நினைவில் இருக்கிறது. பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடம் பொல்கொல்லைக்கு மாற்றப்பட்டபோது அங்கு தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்திற்கும் கீதமொன்றை எழுதி வழங்கினேன். இக்கால கட்டத்தில் மட்டக்களப்பு மகாவித்துவான் புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை அவர்களை அவரது வதிவிடமான குருக்கள் மடத்தில் சந்திக்கக் கிடைத்தது. பொறியியற்பீட மாணவனான எனக்கிருந்த கவியார்வத்தைக் கண்டு கொண்ட புலவரவர்கள் பத்தே நிமிடத்தில் வெண்பா இலக்கணத்தைக் கற்பித்து ஆசி கூறினார். அவரது இறுதி தமிழ் மாணவனான எனக்கு அதன்பின் வெண்பாவியற்றும் ஆவல் பிறந்தது. மனதில் நாளும் தோன்றிய எண்ணங்களை வைத்து ஒரு வருட வெண்பாமாலை எனும் பெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

365 பாக்களைப் பாடினேன். அதே நேரம் திருக்குறளின் 70 பாடல்களை விருத்தப் பாக்களில் விரித்து எழுதினேன். தற்போது 180 விருத்தப் பாக்களை எழுதி முடித்துள்ளேன். 1330 குறள்பாடல்களையும் விருத்தப்பாவில் எனது வாழ்நாளில் எழுதி முடிக்க வேண்டும் என்பதே என் இலட்சியமாகும். தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் யாழ்ப்பாண மருத்துவ மனையில் மரணப்படுக்கையில் இருந்தபோது அவர் குணமடைய வேண்டும் என்று நினைத்து கிளியை இறைவனிடம் தூதாக அனுப்புவதுபோல **'கிளிப் பத்து'** எனும் பெயரில் வேண்டுதல் கவிதையை வடித்தேன். பேராதனை தமிழ்ச் சங்கக் கவியரங்கொன்றுக்கு சில்லையூர் செல்வராசன் தலைமையில் கவிபாட உணர்ச்சிக் கவிஞர் என் வேண்டுகோளை ஏற்று வருகை தந்தபோது அவரிடம் கிளிப்பத்து கவிதையின் பிரதியொன்றை ஒப்படைத்தேன். தந்தை செல்வா இவ்வுலகை நீத்த போது அவரை நினைத்து இரங்கற் பாக்கள் பாடினேன். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் இறையடி சேர்ந்த போதும் அஞ்சலிப்பா எழுதினேன். யான் எழுதிய **'உகந்தைப் புராணம்'** எனும் கலி வெண்பாக் காவியம் பாண்டிருப்பைச் சேர்ந்த இறை தொண்டர் சிவலிங்கம் அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டு அடியார்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பொறியியல் மூளையில் பக்திப் பாடலும் பிறந்தது எனப்பாராட்டி தொண்டர் சிவலிங்கம் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக வாசத்தின்போது மாத்தளை பூபால கிருஷ்ண ஆச்சிரம ஸ்தாபகர் ஸ்ரீமத் பிரேமானந்த ஜீ மகராஜ் அவர்களின் ஆன்மீகத் தொடர்புகாரணமாக ஆச்சிரமப் பிள்ளையாகவே மாறிவிட்ட நான் சுவாமிகளின் 31 வது பிறந்த தினத்திலன்று அவரைப்பற்றிய ஒரு வாழ்த்துப் பா இயற்றி ஆச்சிரமத்திலேயே அரங்கேற்றினேன். அதைச் சிங்கள மொழியில் அன்பர் ஒருவர் மொழி பெயர்த்துச் சிங்கள அடியார்களுக்கு விளக்கினார். மருதமுனையில் ஈழமேகம் பக்கீர்த்தம்பி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர் கல்முனைப்பூபால் அவர்களின் வேண்டுகோளை ஏற்று கவியரங்கில் கலந்து கொண்ட நான் **'கொழும்பு சென்றேன்'** என்ற குறுங்காவியத்தை அங்கு மேடையேற்றினேன். அதனால் அங்கு கவியரங்கில் கலந்து கொள்ள வந்த உதயகவி, மருதூர்வாணன், பஸீல் காரியப்பர், அன்பு முகைதீன், பாலமுனை பாறூக் மற்றும் பல முன்னணிக் கவிஞர்களையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டேன்.

களுவாஞ்சிக்குடி சைவமகா சபையினரின் விழாவில் கவியரங்கொன்றில் கலந்து கொள்ளும் வாய்ப்பைக் கல்வியதிகாரி க.அ.பாக்கியன் ஏற்படுத்தித் தந்தார். இச் சந்தர்ப்பத்தில் துறைநீலாவணையைச் சேர்ந்த கவிஞர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவா ஜீவரெத்தினம், கவிஞர் பாண்டியூரன் என்போர் எனக்கு அறிமுகமாயினர். அதன்பின் யாழ்ப்பாணத்தில் வதிந்தவேளை நாவலர் சபை நடாத்திய கவிதைப்போட்டியில் பங்குபற்றி **'நாவலனே நீ மீண்டும் பிறக்க வேண்டும்'** எனத் தலைப்பிடப்பட்ட கவிதையை எழுதிப்பரிசு பெற்றேன். காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை அதிபராயிருந்த திரு.கி.நாகராஜனின் பிரிவுபசார வைபவத்தில் பாராட்டு மடல் எழுதி வாசித்துக் கொடுத்தேன். சீமெந்து தொழிற்சாலை வடக்கின் அசம்பாவிதம் காரணமாக மூடப்பட்டபோது அதை மீண்டும் திறக்கக்கோரி **'வேண்டுதல் பத்து'** எழுதினேன். அதை உதயன் பத்திரிகை வெளியிட்டது. அந்த நறுக்கு யாழ்ப்பாண அலுவலகத்திலும் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலும் நெடு நாட்களாகப் போடப்பட்டிருந்தது. எனது இனிய நண்பரான சீமெந்து தொழிற்சாலை உதவிப் பொறியியலாளர் திரு.லோகேந்திரனின் திருமணத்தன்று யான் எழுதிய வாழ்த்துப் பத்திரத்தை வாசித்தளித்தேன். அவரது தந்தை எதிர்பாராதவிதமாக விபத்தில் மரணமடைந்தபோது நண்பரின் வேண்டுகோளின்பேரில் நினைவு மலரில் இரங்கல் பாமாலையை எழுதிக் கொடுத்தேன். சாவகச்சேரியில் உறைந்து அருள்பாலிக்கும் அன்னை மீனாட்சியின் பேரிலும் இத்தியடி வீரகத்தி விநாயகர் பேரிலும் பஜனைப் பாடல்கள் புகழ்பா மாலைகள் புனைந்தேன். ஸ்ரீ சத்திய சாயி சமித்தியில் இணைந்த நான் சாயிதோத்திர பஞ்சகம் ஒன்றை இயற்றினேன். அது சாயி மார்க்கம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது. சுன்னாகம் பூபால கிருஷ்ண ஆச்சிரமத்தில் ஸ்ரீமத் சுவாமி பிரேமானந்த ஜீ மகராஜ் அவர்களின் 43வது பிறந்த தினம் கோலாகலமாகப் கொண்டாடப்பட்டபோது நான் பிறந்ததின வாழ்த்து மடல் வரைந்து அதை அடியார்கள் முன்பு அரங்கேற்றியபின்பு அவ்வாச்சிர நிர்வாகியாயிருந்த திருமதி. பாக்கியலெட்சுமி அவர்களிடம் வழங்கினேன். ஆயுதப் போராளியாயிருந்து அறப் போராளியாய் மாறி உணவும் நீருமின்றி தமிழர் உரிமைக்காய்த் தவமிருந்து அணுவணுவாய் மரணத்தைத் தழுவிய தியாகி திலீபனையும் சாதாரண பெண்மணியாக இருந்தாலும் இந்திய சமாதானப்படையின் அடாவடித்தனங்களை ஆட்சேபித்து ஒரு மாதகாலம் உண்ணா நோன்பு காத்து உயிர்துறந்த மட்டக்களப்பின் மாதரசி அன்னை பூபதியையும் என் கவியுள்ளம் வாழ்த்தத் தயங்கவில்லை. யாழ் நகரைவிட்டு இடம்பெயர்ந்து மட்டக்களப்பு வந்தபின் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணிசெய்த காலம் என் கவிப்பசிக்கு மேலும் தீனி கிடைத்த காலமெனலாம். அங்கு என்னோடு சிவானந்தாவில் கற்ற நண்பர்களையும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அறிமுகமானவர்களையும் மீண்டும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது இதற்கு மேலும் வலுவூட்டியது. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளியீடான **'கிழக்கொளி'**யில் பல கவிதைகளை எழுதினேன். மாணவர்கள் வெளியிட்டு வைத்த **'வெளி'** சஞ்சிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்றில் பிரசுரமான அத்தனை கவிதைகளையும் கவிதையாலே விமர்சனம் செய்தேன். அப்போது கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் அவர்களும் சிவானந்தாவின் முன்னாள் அதிபர் திரு.தியாகராஜா அவர்களும் மேடையில் வீற்றிருந்தனர். கலைமகள் விழாவில் அன்னை சரஸ்வதியை வாழ்த்திக்கவி பாடினேன். மாணவர்களின் ஆக்கங்களோடு எனது ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்படன. இங்கும் சில பாராட்டு மடல்கள் இரங்கற் பாக்கள் எழுதும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டேன். மாணவ ஆலோசகராக பல்கலைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட நான் மாணவர்களை எந்தவித பகிடிவதைகளுமில்லாது வரவேற்கவென என்றும் வாசிக்கத்தக்கதான கவிதையொன்றை எழுதிக் கொடுத்து மாணவர்களை அன்புவழிக்குத்திருப்பினேன். எனது உச்ச ஆக்கமாக யான் திருக்கோணேஸ்வரம் முதல் உகந்தை வரை ஒன்பது ஆலயங்களைத் தரிசித்து அங்கேயே அரங்கேற்றிய பா மலர்களைத் தொகுத்து **'கவி யாத்திரை'** எனும் பெயரில் நூல் ஒன்றை வெளியிட ஆயத்தங்கள் செய்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நண்பர்கள் மாணவ மாணவிகள், என்னைக் கற்பித்த ஆசான் உயர் திரு.வே.கணபதிப்பிள்ளை, இராம கிருஷ்ண சங்க முகாமையாளராகயிருந்த ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தா, அக்கரைப்பற்று விபுலானந்த மாணவர் குருகுல ஸ்தாபகரும் என் சக வகுப்பு மாணவருமான திரு.த.கயிலாயபிள்ளை என்போரிடமிருந்து விமர்சனங்களையும் பெற்றுக் கொண்டேன். சுவாமிகள் தனது விமர்சனத்தில் என்னை ஒரு உணர்சிக் கவிஞர் எனக் குறிப்பிட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் கோயில் கொண்டிருக்கும் ஆலடி சித்தி விநாயகருக்கு ஊஞ்சற் பாட்டு ஒன்றை எழுதி அப்போதைய விவசாய பீடாதிபதியாகவிருந்த பேராதனைப் பல்கலைக்கழக விவசாயப்பட்டதாரியும் எனக்கு நன்கு அறிமுகமானமருமான கலாநிதி சி.இரவீந்திரநாத் அவர்களிடம் கையளித்தேன். புவியியல் பீட மாணவர்களுக்கு நில அளவை பாடத்தை கற்பித்த பொழுது நில அளவையின் நான்கு முறைகளையும் நான்கு வெண்பாக்களில் பாடினேன். இதை வாசிக்கக் கேட்ட மாணவர்கள் மகிழ்ச்சிப்பெருக்கெடுத்து எனக்கு உபசாரம் செய்தனர். எனது ஐம்பதாவது பிறந்த தினத்தை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒரு இலக்கிய விழாவாகக் கொண்டாடினேன். யான் அதுவரை எழுதிய கவிதைகள் கட்டுரைகள் என்பவைகளின் கையெழுத்துப்பிரதிகள், சஞ்சிகைகள், பத்திரிகை நறுக்குகள் ஆகியனவற்றைக் காட்சிப்படுத்தினேன். சிவானந்த வித்தியாலய மாணவரும் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமாயிருந்த கலாநிதி திருச்செல்வம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 50 - 30=20 எனும் கணணி அச்சு நூலை வெளியிட்டேன். உபவேந்தர் பேராசிரியர் ம.செ.மூக்கையா, கலாநிதி சி.இரவீந்திரநாத், பேராதனைப் பல்கலைக்கழக ஒரே வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவியான கிழக்குப் பல்கலைக்கழக நூலகரான திருமதி அருள்நந்தி, கலாநிதி பிரேம்குமார் மற்றும் விரிவுரையாளர்கள், தொழிநுட்ப ஊழியர்கள் பயிராக்கவியல் துறைத்தலைவர் திருமதி மகேந்திரன் என்போர் கலந்து சிறப்பித்தனர். பழைய அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். இக்காலப்பகுதியில் மருதமுனையில் ஈழபாரதி மருதூர்வாணனின் தலைமையில் **'சண்டையை நிறுத்திச் சமாதானம் வளர்ப்போம்'** எனும் தலையங்கத்தில் கவிதைபாடினேன். மருதூர்வாணன் நடாத்தி வந்த **'சமாதானம்'** சஞ்சிகையில் **'நீதிகள் நிலைபேற வேண்டும்'** என்னும் எனது கவிதை இடம்பெற்றது. இக்கவிதை கவிதைப்போட்டியில் இரண்டாம் பரிசில் பெற்றதாகும்.

கிழக்குப் பல்கலைக்கழகச் சேவையை முடித்துக் கொண்டு கொழும்புக்குக் குடும்பத்தோடு இடம்பெயர்ந்த நான் திறந்த பல்கலைக்கழகத்தில் பணி புரிந்தேன். அக்காலகட்டத்தில் **'விபபி கலைஇலக்கிய மன்றம்'** அகில இலங்கை ரீதியில் நடாத்திய கவிதைப்போட்டியில் **'சண்டையை நிறுத்திச் சமாதானம் வளர்ப்போம்'** என்ற எனது கவிதை முதற் பரிசைத் தட்டிக் கொண்டது. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் பணமும் சங்கு வடிவிலான ஐம்பொன்னாலாக்கப்பட்ட விருதும் எனக்கு வழங்கப்பட்டன. பம்பலப்பிட்டியில் உள்ள இந்து கலாசார நிறுவனம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய கவிதைப்போட்டியில் **'வேனிலான் தந்த விருது'** என்னும் கவிதை முதற்பரிசு பெற்றுக் கொண்டது. ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் பணமும் சான்றிதழும் அப்போது இந்தியத் தூதுவராய் இருந்த திருமதி நிருபமா ராவ் அவர்களால் வழங்கப்பட்டன. இதே கவிதை பலாலியில் இயங்கிய யாழ் வானொலியில் பிரபல ஒலிபரப்பாளர் ஒருவரால் சிறந்த கவிதையாக மதிக்கப்பட்டு வாசிக்கப்பட்டது. எனது இனிய சிவானந்தா நண்பனும் கிழக்குப்பல்கலைக்கழக ஆங்கிலக் கல்விப்பீட சிரேஸ்ட விரிவுரையாளராகவுமிருந்த திரு.கிருபாகரனின் திடீர் மறைவுகேட்டு அதிர்ச்சியுற்று அவருக்கு நினைவுப்பாமலர்கள் வடித்து ஆறுதலடைந்தேன். அப்பல்கலைக்கழக விரிவுரையாளரும் கல்விமானுமாகிய திரு.செ.யோகராஜா அவர்களின் வேண்டுகோளை ஏற்று கிருபாகரன் நினைவு மலருக்காக பிறிதொரு பாமாலையையும் எழுதி அனுப்பினேன்.

பக்தியிசைப்பாடகருமான பிரம்மஸ்ரீ நீதிராஜ சர்மா அவர்களால் 2003ல் இலங்கையில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டையொட்டி வெளியிடப்பட்ட இறுவட்டில் நான் இயற்றிய வற்றாப்பளைக்கண்ணகி அம்மன், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் மற்றும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் பற்றிய பக்திப்பாடல்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத ஆசிரியை திருமதிபிரேமலதா தயாபரன் நீதிராஜ சர்மா மற்றும் அப்பலோ மருத்துவமனை டாக்டர் சந்திரசேகர சாண்டில்யன் ஆகியோர் பாடியிருந்தனர். மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்க முகாமையாளராகவிருந்த ஸ்ரீமத் சுவாமிஜீவானந்தாவின் முக்தியை முன்னிட்டு நான் வடித்த அஞ்சலியை அவரது சீடரும் உதவி முகாமையாளரும் எனது பூர்வாசிரம ஒரேவகுப்பு மாணவருமான ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா அவர்களுக்கு அனுப்பிவைத்தேன்.

இதுகாலவரையில் தமிழ்க்கவிதைகளையே எழுதிவந்த எனக்கு ஆங்கிலத்திலும் கவிதை படைக்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. அதனால் **Poetry.com** என்னும் இணையத்தளத்தில் திருக்குறளை அடியொற்றிய கவிதைகள்சிலவற்றைப்படியேற்றினேன். அவைகளை ஆராய்ந்த இணையப்பக்க நிர்வாகிகள் எனது கவிதைகளை தரம் வாய்ந்தவை எனப்பாராட்டிக்கடிதங்கள் வரைந்தனர். இதனால் ஊக்கம் கொண்ட நான் தொடர்ந்து வேறு விடயங்கள் பற்றியும் எழுதினேன். அவற்றில் பன்னிரண்டு கவிதைகள் அரை இறுதிப்போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்தனர். 2003-08-15,17 மற்றும் 2004.08.13,15 ஆகிய திகதிகளில் என்னை அமெரிக்காவில் முறையே வாஷிங்டனிலும் பிலடெல்பியாவிலும் நடைபெற்ற உலகளாவிய கவிதை மகாநாட்டிற்கு வந்து கவிதை வாசிக்கும்படி எழுதினர். அவ்வாண்டுகளுக்கான கவிஞராகவும் என்னைத் தெரிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். அங்கு சென்றுவருவதற்கான நிதி வசதி கிடைக்காமையினால் என்னால் போக முடியவில்லை. அதன்பின்பும் ஆங்கிலக்கவிதைகள் எழுதிய நான் அவ்விணையப்பக்கத்தில் 45 கவிதைகளைப்படைத்துள்ளேன். திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் தைப்பொங்கல் விழாவில் 2003 இலிருந்து தவறாமல் பங்குபற்றிக் கவிதை வாசித்து வந்தேன். வாணி விழாவிலும் கவிதைகளை அரங்கேற்றியதுண்டு. பொங்கல் கலாசாரக்குழுவினர் அங்கு வெளியிட்டு வைத்த **'அச்சாணி'**, **'நாணோசை'** மற்றும் **'மருதம்'** மலர்களில் எனது கவிதையோ கட்டுரையோ இடம்பெறுவது வழக்கமாக இருந்தது. நான் பணிபுரிந்த பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள நிர்மாண இயந்திரோபகரணப்பயிற்சி நிலையத்தில் சேவை செய்து விலகியவர்களைப் பாராட்டி ஆங்கிலத்தில் கவிபாடினேன். தேசிய கல்வி நிறுவகத்திலும் அவ்வாறே தொடர்ந்தேன். அவற்றுள் நிறுவகத்தின் உதவிப்பணிப்பாளர் நாயகமாக இருந்து ஓய்வு பெற்ற தேசமான்ய கலாநிதி இந்திரா விலாமணி கினிகே அவர்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய பாராட்டு மடல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வாசிக்கப்பட்டது. அத்துடன் கல்வித்துறையில் உயர்ச்சி பெற்றவர்களையும் கவிதையில் பாராட்டினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப்புகழ் பெற்ற Grand Master G.S.பிரதீப் உடன் சக்தி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கு பற்றியவிடத்து **To have a meaningfull birth** என நான் எழுதிய ஆங்கிலக்கவிதையை வாசித்தேன். உலகப்புகழ் பெற்ற நாதஸ்வர மேதை வி.கே.பஞ்சமூர்த்தி அவர்களின் மகனான நாதஸ்வர வித்துவான் ப.குமரேசனை வாழ்த்திப்பாராட்டி ஒரு கவிமடல் வரைந்து அவர்க்களித்து மகிழ்ந்தேன். எமது குடும்பத்தினரோடு மிகவும் அன்னியோன்யமாகப் பழகிய கணித ஆசிரியர் மகாதேவன் லண்டன் மாநகரில் வதிந்தபோது இறைவனடி சேர்ந்ததை அவர் மகள் அறிவித்தபோது அவரது குணநலச்சிறப்புக்களை நினைந்து வெண்பாவிலேயே இரங்கற்பா எழுதியதோடு நினைவு மலரையும் தொகுத்துக் கொடுத்தேன். பல நினைவு மலருக்குத் திதி வெண்பாக்கள் எழுதியுள்ளேன்.

நண்பரும் கவிஞருமான செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணனை ஆசிரியராயக் கொண்டு மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் **'செங்கதிர்'** இதழில் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தேன். அவர் முன்பு ஆசிரியராகவிருந்த கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடான **'ஓலை'** சஞ்சிகையிலும் எனது சில கவிதைகள் வெளியிடப்பட்டன.

வீரகேசரி பத்திரிகையில் 2011 பொங்கலை முன்னிட்டு நான் எழுதிய பொங்கல் பிறந்தால் புதுவாழ்வு வருமென்று என்னும் கவிதை பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சுமார் 32 ஆண்டுகளின் பின்பு 2011 தைப்பொங்கல் விழாவில் கொழும்புத்தமிழ்ச்சங்க மேடையில் பொங்கல் கவிதையொன்று பாடினேன். திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 2011 இன் பொங்கல் விழாவில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளநிலை குறித்து **'கிழக்கு வெள்ளம் தந்த கீறல்'** எனும் கவிதையை அரங்கேற்றினேன். இக்கவிதை மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் இருந்து திரு மதன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் **'கவிஞன்'** சஞ்சிகையிலும் பிரசுரமாகியுள்ளது.

## எனது வேறு பரிமாணங்கள்:

எனக்குக்கட்டுரை எழுதும் ஆற்றல் உண்டு. நான் மகனுக்காக எழுதிய கட்டுரையொன்று அவரைச் சிங்கப்பூரில் 2005இல் நடைபெற்ற உலக சமாதான மகாநாட்டுக்கு அனுப்பிப்பங்குபெற வைத்தது. இன்னுமொரு கட்டுரையான சான்றோரை உருவாக்குவது சிறந்த கல்வியாகும் என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ஆவணமாக்கல் சபையின் பத்தாயிரம் ரூபாய் பரிசைப் பெற்றுத் தந்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து 1994 ஆம் ஆண்டுவாக்கில் 'யாது மூரான்' வே.நவமோகனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த **'மாற்றம்'** என்னும் சஞ்சிகையில் எனது ஏழு கட்டுரைகள் வெளியிடப்பட்டன. வீரகேசரி, தினகரன், உதயன் பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதியுள்ளேன். ஆங்கிலத்திலும் சில கட்டுரைகள் வரைந்துள்ளேன். தனிப்பட்ட அனுபவங்கள் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளும் அனேகம் உண்டு

ஐந்தாம் தரத்தில் கல்வி பயிலும்போது எனது தந்தையாரால் எழுதப்பட்ட **'தமிழகம் தந்த பாரதி'** எனும் தலைப்பிலான பேச்சினை விபுலானந்த சபை நடாத்திய போட்டியில் பேசி முதலாம் இடம் பெற்றேன். சங்கீதப்பாடல்களையும் பக்திப்பாடல்களையும் பாடும் திறனும் எனக்கிருந்தது. ஆலயங்களில் பஜனை தேவாரப்பாடல்கள் பாடுவதிலும் நான் ஈடுபாடு காட்டினேன். சிவானந்த வித்தியாலயத்தில் பயிலும்போது அங்கும் இராமகிருஷ்ண சங்கத்தின் நிகழ்ச்சிகளிலும் தேவாரப்பண்ணிசை பாட நிறையச்சந்தர்ப்பங்கள் எனக்கு வாய்த்தன. பாடசாலையில் எட்டாந்தரத்தில் கல்வி பயிலும்போது எனது சங்கீத குரு உயர்திரு தி.சிவக்கொழுந்து ஆசிரியர் அவர்கள் என்னோடு, கயிலைநாதன், கமலராஜ சர்மா ஆகியவர்களைக் கொண்டு சங்கீதக்கோஷ்டியொன்றை அமைத்தார். நாங்கள் பாடசாலை நிகழ்ச்சிகளிலும் இராமகிருஷ்ண சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளிலும் மட்டுமன்றி ஒரு முறை மட்டக்களப்புத் தமிழ்க்கலா மன்றத்திலும் அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட இலங்கை வானொலியின் நேரடி அஞ்சல் நிகழ்ச்சியிலும் பங்கு கொண்டு இசைக்கச்சேரி செய்தோம். எனது சமஸ்கிருத ஆசிரியர் பிரம்மஸ்ரீ பூரண தியாகராஜ குருக்கள் அவர்களும் சங்கீத ஆசிரியரும் எனது பாடும் திறமையை மேலும் மெருகூட்டினர். குறிஞ்சிக்குமரன் ஆலயம், நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயம், சங்கத்தானை இத்தியடிப்பிள்ளையார் கோவில், மீனாட்சியம்மன் ஆலயம், நாவலடிப்பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு புளியந்தீவு சித்திவிநாயகர் ஆலயங்களின் பிரதான பஜனைப்பாடகராக நான் இருந்தேன்.

சிவானந்த வித்தியாலயத்தில் எனது அபிமான ஆங்கில ஆசான் திரு.குகதாசன் அவர்களின் நெறியாள்கையில் **'Gready wish'** எனும் ஆங்கில நாடகத்தில் **mother** ஆக நடித்தேன். **'வருஷம் பொறந்த முன்ன முன்னம்'** என்னும் நகைச்சுவை நாடகத்தில் வாத்தியார் மனைவியாக நடித்தேன். இதே நாடகம் விபுலானந்த சபையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையேற்றப்பட்டபோது வாத்தியாராக நடித்தேன். சிவானந்த வித்தியாலயப் பரிசளிப்பு விழாவொன்றில் **'பரதன்'** என்ற நாடகத்தில் கைகேயி பாத்திரம் ஏற்று நடித்தேன். சிவானந்த விடுதி மாணவர் சங்கம் சார்பாக **'சாம்ராட் அசோகன்'** நாடகத்தில் பிக்குவாக நடித்தேன்.

தம்பிலுவில் மகாவித்தியாலய மாணவர்களைக் கொண்டு நான் எழுதி இயக்கிய **'வாலிவதம்'** என்னும் நாடகம் தம்பிலுவில் கண்ணகையம்மன் ஆலயத்திருவிழாவில் நடைபெற்றது. திரு.நடராசா ஆசிரியரால் எழுதப்பட்ட **'ஒற்றைக்கண்'** என்னும் நாடகத்தை மாணவிகளுக்குப் பழக்கி அரங்கேற்றினேன்.

அக்கரைப்பற்றுக்கவிஞர் வடிவேல் எழுதி அண்ணாவிமணி வேலுப்பிள்ளை மற்றும் பண்டிதர் கதிர்காமத்தம்பி அவர்களின் நெறியாள்கையில் புரடசிகரமாக பல முறை அரங்கேறிய **'சிவராத்திரி மகத்துவம்'** எனும் நாட்டக்கூத்தில் பிரதான பக்கப்பாட்டுக்காறராகப் பங்கு பற்றினேன். சாவகச்சேரி சத்திய சாயி சமித்தியில் ஈடுபாடு காட்டிய சமயம் சமித்தியின் பிரதிநிதியாக திருநெல்வேலி தலைமை சமித்தி சென்று பஜனையில் பங்கு பற்றினேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர்களாக இணைந்த சமயம் நடந்த வரவேற்பு விழாவில் எமது பொறியியல் பீட இயந்திரப்பொறியியல் விரிவுரையாளரும் உலகப்புகழ் பெற்ற கவிஞருமான பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்கள் எழுதிய **'இரு நண்பர்கள்'** என்ற தாளலய நாடகத்தின் பின்னணிப்பாடகராகவும் செயற்பட்டேன். முன்னாள் அம்பாரை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரும் சிறந்த பேச்சாளருமாகவும் விளங்கிய திரு. ஜெ.திவ்வியநாதனுடன் அக்பர் நெல் விடுதியில் ஒரே அறை நண்பர்களாக வதிந்தகாலம். அவர் கண்டிச்சைவமகா சபையில் நிகழ்த்திய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பக்கப்பாட்டுப் பாடினேன். அத்துடன் திவ்வியநாதன் பிரதான பங்காளியாயிருந்த பல்கலைக்கழக நாடக சங்கத்தின் சார்பில் அவர் அரங்கேற்றிய நாட்டுக்கூத்து ஒன்றிலும் பக்கப்பாடகராகப் பங்குபற்றினேன். பேராதனைப் பல்கலைக்கழக சங்கீத நாட்டிய சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினராவேன்.

## கவிதை பற்றிய என் எண்ணப்பாடு:

வெண்பா, அறுசீர்,எண்சீர் விருத்தங்களிலும், பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்திலும்,ஆசிரியப்பாவிலும், கலிவெண்பாவிலும், கட்ளைக்கலித்துறையிலும் பொதுவாகப்பாடல்களை இயற்றிவரும் எனக்கு கவிஞர் மகாகவி அறிமுகப்படுத்திய குறும்பாவிலும் சில கவிதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத முடிந்தது. அவைகள் பிரசுரமாகியும் உள்ளன. முழு நேரமாகவன்றி பகுதிநேரமாகவே கவிதை எழுதும் எனக்கு பாவிலக்கணத்தில் பரிபூரணமான பரிச்சயம் இல்லையெனினும் செய்யுள்களை வாசிக்கும்போது எழும் இசையைக்கவனித்து வார்த்தைகளை அமைக்கிறேன். எனது கவிதைகளில் கற்பனைவளம் குறைவாகவே இருக்கும். ஆனால் யதார்த்தம் காணப்படும். அக்காலப்புலவர்கள் பலர் யதார்த்தத்தைவிட கற்பனைகளில் அதிகம் மூழ்கிச் செய்யுள்களை இயற்றியமை காரணமாகத் தமிழர்களின் ஆதிகாலச் சரித்திரங்களை ஆதாரபூர்வமாக அறிய முடியாதுள்ளது. அற்புதமாகச் செய்யுள் இயற்றிய புலவர்பெருமக்கள் பலரின் பெயர்கள் கூடத்தெரியாமல் உள்ளது. அவர்கள் பாடிய காலம் கூட அறியப்படாமல் உள்ளது. நான் மிகச்சாதாரணமான ஒரு கவிஞன். எனினும் எனது வாழ்நாளில் கண்டு உணர்ந்து அனுபவித்தவைகளை இந்தக்காலத்தில் இது நடந்தது எனப்பிறர் தெரிந்து கொள்ளக் கூடியவாறு கவிதைகளை அமைத்து வருகிறேன். தமிழ்ச்சமுதாயத்தில் தோன்றி யிருக்கும் கவிஞர்களும் இதனைக் கடைப்பிடித்து எழுதினால் அவர்களின் அனுபவங்களையும் பங்களிப்பையும் படைப்பின் காலத்தையும் பிறர் அறியக்கூடியதாயிருக்கும் என நினைக்கிறேன்.

மற்றும் அகவொழுக்கம் சார்ந்த கவிதைகள் அளவுக்கடங்காமல் தமிழில் பெருகியிருப்பதால் அவைகளைத் தவிர்த்துப்புற உலக விடயங்களைப் பதிவு செய்து வைத்தலிலேயே கவனம் செலுத்தி வருகிறேன். கவிநயம் என்ற அழகுணர்ச்சியை இதிலும் காணவும் அங்கீகரிக்கவும் நாம் எம்மை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். எந்த ஒரு விடயத்தையும் ஓரளவு இலக்கணக்கட்டுக்கோப்புக்குள் நின்று கவிதையில் எழுதமுடியும் என்ற துணிவு கொண்டு எழுதிவரும் நான் புதுக்கவிதை எனத் தற்போது பலர் எழுதிக்குவித்துவரும் கட்டுக்கோப்பற்ற ஆக்கங்கள் செம்மொழியாம் தமிழ் மொழியைக் களங்கப்படுத்திவிடும் என அஞ்சுகிறேன். புதுக்கவிதை எனக் கூறி எழுதப்படுபவைகளில் கருத்துவளம், கற்பனைகள், உவமான உவமேயங்கள் இல்லாமலில்லை. அவைகளை ஓரளவாவது இலக்கணக் கட்டுக்கோப்புக்குள் ஓசைநயம்விளங்கும்படியாக யாப்பார்களாயின் எம் தமிழ் அன்னைக்கு மேலும் அலங்காரம் செய்தவர்களாக ஆவார்கள் அன்றோ? அதைவிட்டு கவிதையில் புது முறையைப் புகுத்துகிறோமென்று கூறி மேலும் தமது கட்டுக்கோப்பு கொஞ்சமும் இல்லாத ஆக்கங்களைப் படைப்பார்களாயின் தமிழன்னையை அலங்கரித்திருக்கும் மங்களகரமான தங்க அணிகளைக்களைத்துவிட்டு 'இமிற்றேசன்' ஆபரணங்களை அணிவித்தது போன்றே ஆகிவிடும். சங்கீதம், நாட்டியம், ஓவியம் போன்று கவிதையும்அழகுணர்ச்சியை வெளிப்படுத்தும் ஊடகமாகும். சிறந்த கவிதையொன்றை நீட்டி, அழுத்தி தெளிவாக வாசிக்கும்போதே அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் ஏற்படும். அழகுணர்ச்சி தோன்றும். எனவே கவிதையும் ஒரு அழகியற்கலை ஆகும். பாவிலக்கணத்தின் கட்டமைப்பைக் கவிஞர்கள் அனைவரும் கற்றுச் செய்யுள்கள் இயற்றினால் எம் தமிழன்னை மிகவும் அகமகிழ்வாள். நன்கு ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டு பல புலவர் சிரோமணிகளால் கடைபிடிக்கப்பட்டு வந்த இலக்கணக்கட்டுக்கோப்பை அடிப்படையாகக் கொண்டு பல செய்யுள்களில் , பக்திப்பாமாலைகளில், காவியங்களில் காலவெள்ளத்தால் மறைந்துபோய்விட்ட பாடல்வரிகளைப் பற்றியும் ஆராய்ந்து அவைகளைத் தேடிக்கண்டுபிடித்து மூல நூல்களை முழுமையாக்க வேண்டும். 'ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்தொன்றாம் புலவர் வார்த்தை பதினாயிரத்தொருவர்' என்று ஔவையார் மொழிந்ததற்கேற்ப ஆயிரத்திலொருவரெ புலவராக, கவிஞராக எழுத்துலகில் பிரகாசிக்க முடியும். அந்த ஆயிரத்திலொன்றாகவாவது கவியுலகில் காலடி வைத்துள்ள நாம் மாற முயற்சிக்க வேண்டும் என்பதே என் அன்பான வேண்டுகோளாகும்.

**சஞ்சிகையில் வெளிவந்த சங்கதிகள்:**

| சஞ்சிகையின் பெயர் | வெளிவந்த காலம் | ஆக்கத்தின் விபரம் |
|---|---|---|
| 1. இந்து தருமம் | 1978 | பராசக்தி அழைப்பு-கவிதை |
| 2. இந்து தருமம் | 1979 | குறிஞ்சிக்குமரன் குயிற்பத்து |
| 3. இந்து தருமம் | 1981 | ஓம் குறிஞ்சிக்குமரா!-கவிதை |
| 4. இந்து தருமம் | 1981-82 | கூறுகிறேன் கேள் குமரா! - கவிதை |
| 5. இந்து தருமம் | 1982-83 | குருவருளால் திருவருள் - கட்டுரை |
| 6. நுண்தொழில் இளைஞன் | 1993 | பிரயோக இயந்திரப் - பொறியியல் - கட்டுரை |
| 7. மாற்றம் | தை-பங்குனி 1993 | மாற்றமும் விளைவுகளும் - கட்டுரை |
| 8. மாற்றம் | சித்திரை-ஆனி 1993 | தனிமனித சுதந்திரம் - கட்டுரை |
| 9. மாற்றம் | ஆடி புரட்டாதி 1993 | முரண்பாடுகள் - கட்டுரை |
| 10. மாற்றம் | ஐப்பசி-மார்கழி 1993 | அச்சவுணர்வு - கட்டுரை |
| 11. மாற்றம் | தை-பங்குனி 1994 | பிரச்சினைகளும் தீர்வுகளும் - கட்டுரை |
| 12. மாற்றம் | சித்திரை - ஆனி 1994 | தொழில்நுட்பக் கலாசாரம் - கட்டுரை, தமிழ் அறிவியல் மேதைகள் - கட்டுரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மாற்றம் ஆடி-புரட்டாதி 1994 வாய்ப்பும் வசதியும்-கட்டுரை
14. மாற்றம் பத்தாவது இதழ் போலிகள் - கட்டுரை, ஒரு கலத்தாலான உயிர் - கட்டுரை
15. மாற்றம் ஆண்டு மலர் 1994 கட்டுப்பாடுகள் - கட்டுரை
16. கிழக்கொளி சித்திரை-ஆனி 2001 தத்துவமேதை உலகப் புகழ் பேராசிரியர் ஜே.கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகள் - கட்டுரை
17. கிழக்கொளி ஆடி-புரட்டாதி 2001 சமாதானம் சாகடித்த சழக்கர்கட்கு - (கவிதை)
18. சமாதானம் 24.08.2001 நீதிகள் நிலைபெற வேண்டும் (பரிசுக்கவிதை)
19. ஓலை ஏப்ரல் 2002 டெங்கு கவிதைகள்
20. ஓலை யூன் 2002 நாவலனே நீ மீண்டும் பிறக்க வேண்டும் - கவிதை
21. செங்கதிர் மாசி 2008 மறக்கமுடியாத பேராசிரியர் சு.வித்தியானந்தன் - கட்டுரை
22. செங்கதிர் பங்குனி 2008 செங்கதிர் ஆசிரியர் பற்றிக் கவிதை
23. செங்கதிர் வைகாசி 2008 ஈழத்து இலக்கியச் சிற்றிதழ்கள் வரிசையில் 'மாற்றம்' - கட்டுரை
24. செங்கதிர் ஆடி 2008 ஏன் நடுக்கம் புவிமகளே! - கவிதை
25. செங்கதிர் மார்கழி 2008 சுனாமி பற்றிப் பாடாமல் போவேனோ? - (கவிதை)
26. செங்கதிர் பங்குனி 2009 என் கண்ணான பெண் இவள்! - கவிதை
27. செங்கதிர் ஆனி 2009 கருத்தாடல் - நீலாவணன் ஒரு சிறந்த கவிஞர் அல்லவாம்! இளையதம்பி தயானந்தாவின் கண்டுபிடிப்பு! - கட்டுரை
28. செங்கதிர் ஆடி 2009 அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே! - கட்டுரை
29. செங்கதிர் தை 2010 பொங்கல் தின சிறப்புக்கவிதை, புலவர் மணியிடம் பாடம் கேட்ட பொறியியல் பீட மாணவன் - கட்டுரை
30. செங்கதிர் மாசி 2010 கவியோகி சுத்தானந்த பாரதியார் தரிசனம் - கட்டுரை
31. செங்கதிர் செப்டம்பர் 2010 ஈழத்தமிழர் எதிர்காலம் - கவிதை
32. கவிஞன் தை 2011 'கிழக்கு வெள்ளம் தந்த கீறல்' - கவிதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பெட்டிஷன் பிறந்தது

**(வெலிப்பன்னை - அத்தாஸ்)**



இன்று ஞாயிற்றுக்கிழமை அன்வருடைய சகபாடி வீட்டில் கல்யாணம் நடைபெறுகிறது. எனவே இன்றைய தினம் நிச்சயம் எங்கள் றோட் வழியாக அன்வர் வருவார். இது சின்னம்மா வுடைய எதிர்பார்ப்பு. 'பிறின்ஸிப'ல்லுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேண்டும். என்னைப் பாடசாலைக்கு வரவழைத்து ஆசிரியர்கள் முன்னிலையில் ஏளனப் படுத்தினார். முதலாம் வகுப்பில் படிக்கும் எனது மகளின் பிள்ளையை நான் கவனிப்பதில்லையாம். எனது மகனும் (பிள்ளையின் மாமனாரும்) பாடசாலைக்குப் பிள்ளையின் தேவைக்கு அழைத்தால் வருவதில்லையாம். போதாக்குறைக்கு ஸ்கூலுக்குக் கொடுத்த இருநூற்று ஐம்பது ருபாவையும் திருப்பி அனுப்பி இருக்கிறார். என்ன திமிர்?

• • •

பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதென்று நாமும் ஸ்கூலுக்குப் போகவேண்டுமா? மருமகனும் தேவையில்லாத வேலைக்குப் போய் 'றிமாண்ட்' காக்கிறானே! அவனிருந்தாலாவது இரண்டு நன்றாகக் கேட்டிருப்பான். இருக்கட்டும்! இன்றைக்கு அன்வர் வந்தால் வீட்டுக்குக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்ல வேண்டும். அவர் ஏற்கனவே 'பிறின்சிப'லுக்கு விசாரணைகள் உண்டாக்கி உசுப்பி வச்சிருக்கிறார். நானும் ஏதாவது ஒரு வழிபார்க்கச் செய்ய வேணும். இவ்வாறு சின்னம்மா கங்கணம் கட்டிக் கொண்டு அன்வர் வருவதை எதிர்பார்த்த வண்ணம் வழிமேல் விழிவைத்துக் கவனித்தவாறே நின்று கொண்டாள்.

• • •

அன்வருக்கு ஒருவித மனக்கோளாறு. எல்லா விடயங்களிலும் தான் பிரகாசிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு. எங்கு போனாலும் வைபவங்கள்நடக்கும் வீடுகளிற்கூட சென்று தொண தொணவென்று கதைத்து எல்லார் முன்னிலையிலும் தன்னைப் பறை சாற்றிக் கொள்வார். புதிதாக ஊரில் 'டிஸ்பென்ஸரி' ஒன்று திறக்கப்பட்டால் தனது ஆள்தான் 'டொக்டர்' என்றும் தான் கூட்டிவந்து 'டிஸ்பென்சரி' திறக்க வைத்ததாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்கு நல்லது செய்கிறேன்! என்றும் 'கொலர் அப்' பண்ணிக் கொள்வார். பள்ளிவாசலில் புதிதாகச் சேவை புரிய வந்த கதீபைக் கூடத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து சாப்பாடு போட்டு அங்கே தான் பெரியவர் என்ற பிரமையை அவருக்கு உண்டாக்கப் பார்ப்பார்.

ஏதாவது ஊரில் விசேடம் நடந்தால் அது தன்னால் நடந்தது என்று எல்லோரிடத்திலும் சொல்லித் திரிவார். அரசாங்கக் கட்சிக் கிளையினர் முயற்சித்துப் பாதைக்குக் 'கொங்கிறீட்' போட்டுத்திருத்தம் மேற்கொண்டால் அது தன்னால் நடக்கிற காரியம். இவனுகளக் கஷ்டப்பட்டு அனுப்பி வச்சு மந்திரியிடத்தில காசு வாங்க வச்சன். அதனாலதான் வேலையாச்சு என்று பீத்தித் திரிஞ்சி எல்லோரிடமும் பிரபல்யம் அடைய முயற்சிப்பார். 'கொட பெரகோர்' என்று மற்றவர் சொல்லுமளவுக்கு வழக்குகளுக்குப் பொயின்ட்ஸ்களைக் கொடுப்பார். தான் 'புரக்டர்' என்றும் 'கோர்'ட்டில் வழக்குகளுக்கு முற்படுவதாகவும் வெளியூரவர்க்கும் இவரை அறியாதவர் களிடத்தும் பறைசாற்றியுள்ளார். தான் வெளியூரில் 'டிஸ்பென்சரி' நடத்துவதாகவும், டொக்டர் பாஸ் (சித்தி அடைதல்) தனக்கிருக்கிற தென்றும் ஊரில் மற்றும் பலரிடம் எடுத்துக் கூறியுள்ளார். ஊரில் வைத்தியம் செய்ய நேரம் இல்லை என்றும் கூறும் அவர் இறந்து போன ஒருவருடைய 'டாக்டர் அன்வர் எம்.பி.பி.எஸ்' என்ற பெயர்ப் பலகையை வீட்டினுள் பலரும் காணும்படியாக சுவரில் வைத்துள்ளார். அன்வர் டாக்டர் தான் என்பதற்கு இது ஆதாரம். எனினும் ஊர்ப் பள்ளிக் கூடத்தில் ஜி.சி.ஈ சாதாரண தரம் சித்தியடையவில்லை என்பது பலரும் அறிந்த இரகசியம். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் கற்றறிந்தவர்கள் மிகக் குறைவானவர்களே அவ்வூரில் இருப்பதனாலும் ஏனைய பாமரர்கள் ஏமாந்தபேர்வழிகள் என்பதாலும் இவர் இவ்வாறெல்லாம் ஜமாய்த்துத் தள்ளுகிறார்.

அவ்வாறே பாடசாலை அதிபர் தான் சொல்லும் விதம் செயல்படுகிறார். அதனால் 'ஸ்கூல்' முன்னேற்றம் காண்கிறது என்று கூறித்திரியத் தவறவில்லை. தனது சகோதரியையும் பாடசாலைக்கு மாற்றம் எடுத்துவரச் செய்து மெதுவாக அவ்வாசிரியையை அதிபர் ஸ்தானத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்று அன்வர் கங்கணங் கட்டிக் கொண்டார்.

அன்வரின் சகோதரி எவ்வாறோ முயற்சித்துப் பாடசாலைக்கு மாற்றம் பெற்று வந்தார். அன்வர் மெது மெதுவாகத்திட்டத்தை அமுலாக்க முனைந்து நின்றார். பிரச்சார முறையை இதற்கும் ஆயுதமாகப் பாவித்தார். தனது சகோதரி ரிஸானா குளத்தூர் ஸ்கூலுக்கு வந்த பிறகு நல்ல முன்னேற்றம். அதிபர் கமால்தீனுக்கு நல்ல விடயங்களை எடுத்துக்கூறி வழிகாட்டுவதனால்தான் இவ்வாறு முன்னேறுகிறது. எனது தொழிலுக்குப் போய்க் கொண்டும் நான் எவ்வளவோ வழிகாட்டல்களை அதிபருக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன். எனது சகோதரி ரிஸானா ஆசிரியை வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு ஓரளவு எனக்கும் ஓய்வு கிடைத்துள்ளது. எனது சகோதரி நிறையப் படித்தவர். எத்தனையோ அதிபர் தரங்களையும் டிப்ளோமாக்களையும் பெற்றிருக்கிறார் 'பிரின்ஸிபல்' கமால்தீனிலும் மிகைத்துத் தராதரம் உள்ளவர். எனவே நல்ல முறையில் இனிப்பாடசாலை உயர்வு பெறும் என்றெல்லாம் பீத்தித் திரிந்தவர்.

இத்தகைய வழிகளைக்கையாண்டும் தமது இலக்கை அடைய முடியாது; என்பதைக் கண்ட அன்வர் தமது சகோதரி வீட்டில் பாடசாலை சம்மந்தமாகப் பேசவென ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். அழைப்புக்களை அனுப்பினார். பிரதேச சபைத்தலைவர், அங்கத்தவர் வேறும் முக்கியமானவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஊரில் வீடு வீடாகச் சென்று அழைப்பு விடுத்தார்.

மொத்தமாகக் கூட்டி இருபத்தைந்துபேர் கூட்டத்துக்கு வந்திருந்தனர். உத்தியோகத்தர் தெரிவு நடந்தேறியது. பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொறுப்புகள் பங்கிட்டு வழங்கப்பட்டன. 'குளத்தூர் கல்வி அபிவிருத்திச் சங்கம்' என்று அமைப்புக்குப் பெயர் சூட்டப்பட்டது.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி 'ரோனியோ ப்ரின்டர்' எடுத்து அதிபர் பிழைகளைச் சுட்டிக்காட்டி விபரித்து வீடு வீடாக வாராந்தம் மாதத்துக்கு நான்கு முறை விநியோகிக்க வேண்டும். அவற்றின் பிரதிகள் கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம், பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் அனுப்பிவைத்து அதிபருக்கு அங்கெல்லாம் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

ஊர் மத்தியில் ஊர்வலம் நடத்தி அதிபருக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். அதிபரின் ஊழல்களைச் சுட்டிக்காட்டிப் பல்வேறு இடங்களுக்கும் பெட்டிஷன்களை அனுப்ப வேண்டும். இத்தீர்மானங்களை அமுலாக்கும் போது அதிபர் அசந்துவிடுவார். தனது சகோதரியை பிரின்ஸிபலாகப் போட்டு 'ஸ்கூல்' அதிகாரத்தைப் பிடிக்கலாம் என்ற முடிவுக்கு வந்து நடவடிக்கைகளை மேற்கொண்டார் அன்வர்.

• • •

இந்தச் சம்பவங்களை எல்லாம் நன்கு அறிந்து வைத்திருக்காவிட்டாலும் 'பிரின்ஸிப'லுக்கு எதிராக இயங்கி விசாரணை உண்டாக்கியவர் அன்வர் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார் சின்னம்மா. எனவே தனக்கு வந்த தலை குனிவை இந்த முறையில் தீர்த்துக் கொள்ள சின்னம்மா முயற்சி பண்ணியதில் வியப்பில்லை. மகள் வெளிநாட்டில், மருமகன் 'றிமாண்'டில். பிள்ளை தன்னிடம். மகளின் சம்பளத்தால் பிள்ளை கவனிக்கப்படுவதில்லை என்ற அதிபரின் குற்றச்சாட்டே சின்னம்மாவுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகுனிவு உண்டாக்கியதான நினைப்புக்குக் காரணம்.

• • •

அன்வர் எடுத்த முயற்சியினால் கல்வித்திணைக்களம், கல்வி அமைச்சு மாத்திரமல்ல சி.ஐ.டி, வருமானவரிப் பகுதி, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குடிவரவு - குடியகல்வு பகுதி (பாஸ்போர்ட் விவகாரத்தில் பழைய மாணவிகளின் பிறப்புச் சாட்சிப் பத்திரம் பெற்றிருந்த விவகாரத்தில் பிரின்ஸிபல் உள்ளார்) என்பன பாடசாலை அதிபரை வலை போட்டு அரித்து விசாரணைகள் மேற்கொண்டு முடித்தது மட்டுமல்ல கணக்குப் பரிசீலனைக்குழு (ஓடிட்டர் ஜெனரல்) வும் வந்து கிண்டிக் கிளறி விசாரித்து முடிந்து விட்டிருந்தது. இவையெல்லாம் முடிந்த பிறகுதான் சின்னம்மா அன்வரை நாடும் சந்தர்ப்பம் வந்தது. வழிமேல் விழி வைத்துக் காத்துக் கல்யாண வீட்டுக்குச் செல்பவரைக் கூப்பிட்டு வீட்டில் அமரச் செய்து விவகாரங்களை அவருடன் கதைத்தார்.

அன்வருக்கு அவல் கிடைத்தமாதிரி. நன்றாக வாயை உசுப்பி விட்டார். இன்னின்ன விதமாகச் செய்ய வேண்டும். இவ்விவ்வதிகாரிகளைச் சந்திக்க வேண்டும். ஒரே பேச்சாகச் சொல்லி அதிபர் காசு கேட்கிறார்! என்றே சொல்ல வேண்டும்; அப்பொழுதுதான் அதிகாரி பாடசாலைக்கு வந்து அவருடைய திமிரை அடக்கிப்போடுவார். நான் தேவையான முறையில் 'பெட்டிஷனை'த் தயாரித்து 'டைப்' பண்ணி உங்களுக்குத் தருவேன். ஐந்நூறு ரூபா செலவாகும். அதைக்கொடுத்துவிட்டால் இரண்டு நாட்களில் - புதன்கிழமைக்குக் கல்விக் காரியாலயம் செல்லக்கூடியதாகச் செய்து தருவேன் என்று வயிற்றில் பால் வார்ப்பது போல நயமாகக் கூறிக் காசு ஐந்நூறு ரூபாவையும் கறந்து சென்றார் அன்வர்.

• • •

குளத்தூர் முஸ்லீம் கிராமம் என்றாலும் இக்கிராமத்தில் தமிழர் இடைக்கிடை வசிக்கின்றனர். சொந்தமாகக் காணி வாங்கி வீடு கட்டி வாழும் தமிழரும் உளர். கூலிக்கு வீடெடுத்து வசிக்கும் தமிழர்களும் இருக்கின்றனர். இந்தவகையில் சின்னம்மா கூலிக்கு வீடெடுத்துக் குளத்தூரில் வசிப்பவர். ஊரில் நடக்கும் சமாச்சாரங்களை அறிந்துள்ளவர். அந்தஊர் முஸ்லீம்பாடசாலையில் முஸ்லீம் பிள்ளைகளுடன் தோட்டத்தமிழ் பிள்ளைகளும் படிக்கின்றனர். ஊரில் முஸ்லீம்களால் சாதிக்க முடியாதவைகளைத் தமிழர் மூலம் சாதிக்க வேண்டும் என்ற அவா அன்வர் இடம் குடிகொண்டிருந்தது. எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல சின்னம்மாவின் விடயம்அன்வருக்கு அமைந்து விட்டது.

• • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு வலயக் கல்வி பணிப்பாளரிடம் இருந்து கடிதம் ஒன்று வந்தது. அதில் பிள்ளையின் பாதுகாவலர் பெயர், விலாசம் குறிப்பிட்டு சாந்தி என்னும் பெயருடைய பிள்ளையைப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளும்போது பாடசாலை வசதிக்கட்டணம், பாடசாலை அபிவிருத்திச்சங்கச் சந்தா என்பவற்றைத் தவிர பணம் எதுவும் அறவிடக்கூடாது எனக் கட்டளை இடப்பட்டிருந்தது.

கடிதத்தை வாசித்த உடனேயே அதிபர் கமால்தீனுக்கு விடயம் புரிந்து விட்டது. சின்னம்மா இந்த மாணவியைப் பாடசாலையில் சேர்த்து மூன்று மாதங்களும் கடந்துவிட்டன. அதற்காக மேற்குறிப்பிட்ட கட்டணங்கள் எதுவும் அறவிடப்படவில்லை என்பது மாத்திரமல்ல, பாடசாலையில் குழாய் நீர் வசதி ஏற்படுத்தவதற்காகப் பெற்றோர் செலவிட முன்வந்த இருநூற்றைம்பது ரூபா காசைக் கூடப் பெற்றுக் கொள்ளாமல் சின்னம்மாவுக்குத் திருப்பி அனுப்பி விட்டோம். இந்தப் பிள்ளையின் தேவைகள் கவனிக்கப்படுவதில்லை என்பதனாலன்றோ இவ்விதமெல்லாம் செய்யப்பட்டது. வாஸ்தவம். இவ்வாறிருக்க இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது எனும் விடயம் பிடிபட அதிபருக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. கடிதத்தை வாசித்த அதிபர் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார்.

தனக்கெதிராக என்னென்ன குற்றச்சாட்டுகளை எழுப்பினார்? இதற்காக என்னென்ன பகீரதப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு எவ்வளவோ விசாரணைகள் நடந்துமுடிந்து விட்டன.? எனினும் இந்தக் கூட்டத்தின் செயற்பாடு இன்னும் ஓயவில்லை. அதனையே கல்விப் பணிப்பாளரின் இக்கடிதம் வெளிக்காட்டுகிறது.அந்தளவு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் ஓர் அணுவளவும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. அதிகாரிகள் உண்மையற்ற குற்றச்சாட்டுக்களின் பின்னணி என்னவென்றும் கண்டுகொண்டனர். இதற்கு உடந்தையாக ஆசிரியைகள் இரண்டுபேரை கல்வித்திணைக்களம் இடமாற்றம் கொடுத்து அனுப்பிவிட்டது. இப்பொழுது அவர்கள் தோல்வி கண்டு விசர்த்தனம் பிடித்த நிலையில் உள்ளதால் எதையும் செய்ய முற்படலாம். அதற்கொரு உதாரணம்தான் வலயக்கல்விப் பணிப்பாளர் எனக்கு எழுதியுள்ள கடிதம். வெளியிலிருந்து கல்லெறிகின்ற வேலை இப்பொழுது நடைபெறுகிறது. வளர்ச்சிப் பாதையில் பாடசாலையைத் தொடர்ந்து இட்டுச் செல்ல வேண்டுமானால் மிகுந்த அவதானம் தேவை என்பது எனக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வந்தார் அதிபர் கமால்தீன்.

ஸேர்! ரயில் வரண்ட் ஒன்று எழுதிக் கொள்ள வேண்டும். அப்ளிகேசன் ஒன்று எடுக்கலாமா? என்று கூறிக் கொண்டு உதவி ஆசிரியர் காமில் அங்கு வரவே அதிபர் நனவுலகத்துக்கு மீண்டார்.■

**(யாவும் கற்பனை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைத்தவனைப் பழிவாங்குவேன்

என்னைப் பழிவாங்கிய
இறைவனை நான்
பழிவாங்க வேண்டும்
என் தோல்விகளிலெல்லாம்
அவன் மகிழ்வடைந்தான்
அவன் வெற்றிகளை
வீழ்த்த வேண்டுமெனில்
நான் நல்லவைகளிடம்
தோற்றுப் போக வேண்டும்
நான் அதர்மத்தை
கையில் ஏந்துகையில்
ஆண்டவன் எனை நெருங்கிவிடுவான்
எனை வதைப்பான்
காட்சி தருவான்
கருணை கொள்வான்
தனது கால்களுக்கிடையில்
என்னை இருத்துவான்
தன்னை நல்லவனாக
காட்டிக் கொள்ள
என்னை வைத்துப் பயணிப்பான்
நான் அவனைச் சுமப்பேன்
கெட்டவனாகவே என்னை
எல்லோரும் பார்த்திருக்க
நான் அவன் வாகனமாகி
அவனைச் சுமப்பேன்
மயிலாக எருதாக
எலியாக சிங்கமாக
இன்னும் எதுவெதுவோவாகி
சுமக்கும் போது
அவன் நல்லவைகள்
என் கெட்டவைகளிடம்
தோற்றுப் போகும்.



வாசுகி குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னது சிரிப்பானது உண்மையானது 03

மழை லேசாகத்தூறி நின்றிருந்த நேரம். பகல் இரண்டுமணி இருக்கும். ஒரு முதிர்ந்த பொலிஸ்காரர் சாதாரணமாக அந்த நேரத்திலே எப்போதும் சிறிது போதையில்தான் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குச் செல்வது வழக்கம்.

அன்று மழையும் பெய்திருந்ததால் சற்று அளவுக்கு அதிகமாகவே 'அங்கிள்' போட்டு விட்டார். கையிலே 'றெயின் கோட்'டுடன் சைக்கிளில் வந்தவர் 'வலன்ஸ்' தடுமாறி அந்தோனியார் வீதியிலே கானுக்குள் விழுந்து விட்டார். ஆனாலும் அந்த பொலிஸ் வீரம் போக வில்லை. எப்படியோ எழுந்து விட்டார். ஆனால் கானுக்குள் விழுந்த 'றெயின் கோட்டு'க்குப் பதிலாக கானுக்குள்ளே விழுந்து கிடந்த பாக்கு மரத்து மட்டையை (நாம் சிறு வயதிலே யாரையும் உட்கார வைத்து இழுத்து விளையாடும் கமுகம் ஓலை) ஓலைப்பக்கமாக கையில் பிடித்துக் கொண்டு இழுத்துக் கொண்டே 'சயிக்கிள்' ஒரு கையில் பிடித்தபடி தள்ளிக் கொண்டும் தள்ளாடிக் கொண்டும் சர சர சத்தத்துடன் முன் நோக்கிச் சென்றார்.

வீதியிலே இந்தக் காட்சியைக் காண ஒரே கூட்டம். எல்லோரும் கைகொட்டிச் சிரித்தார்கள். சிலர் 'விசிலும்' அடித்தார்கள். இரக்கப்பட்ட ஒருவர் 'றெயின் கோட்டை' எடுத்து வந்து அவரிடம் கொடுத்து விட்டுக் கமுகு ஓலையை வாங்கிக் கானுக்குள் வீசிவிட்டார். 'தங்கியூ தங்கியூ' என்று கூறியபடியே 'அங்கிள்' மலை நாட்டு ரயில் போவது போல் வளைந்து நெளிந்து அந்தோனியார்கோயில் முடக்காலே திரும்பிச் சென்று விட்டார்



- பாலமீன்மடு கருணா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நினைவு



அமரர் கனகசூரியம் 19.07.1938 - 24.10.2010

மீன்பாடும் தேன் நாடாம்
மட்டு நகர் மண்ணில்
தீந் தமிழாற் சிறு கதைகள்
தந்து புகழ் பெற்றோன்....!
இன் முகத்தோன் எல்லோர்க்கும்
ஏற்ற நட்பாளன் ......,
சொல்வல்லான் சோர்தலிலாச்
சிந்தனையில் வேந்தன் ...!
என்நாளும்.... எவர்க்கேனும்....
உதவிடவே வேண்டும்.....,
எனும் குணத்தான் இலக்கியமும்
அவ்வாறே செய்தான் ...!
பொன் மனத்தோன்..... கனக ...
சூரியனாம் நாமம்
புகழ் சிறக்கவேயுழைத்து
விண்ணுலகு போனான் ..!

நெஞ்சார்ந்த நட்பென்பால்
நிறைவாக வைத்தான்.....!
நினைந்துருகிக் கவி எழுதி
நான் பாட வைத்தான்.....!
என் கவிதைக்கு நிகர்
எவர்கவியு மில்லை
என்றென்னைப் பாராட்டி
எழுதென்று நிற்பான்

அன்புக்கு இலக்கணமாய்
இவன் வாழ்ந்து சென்றான்....!
அருள் மணக்கும் ரமணமகான்
ஆசிரமம் சென்றே......,
தன் மனத்தின் அழுக்கெல்லாம்
அறத்துடைத்து வென்றான் ..!
தரணிமிசை வாழ்தலெனும்
ஆசையினை விட்டான் .....!

களுதாவளை என்ற.....
வெற்றிலைப்பூம்பந்தற்
கவினார் திரு மண்ணின் ....
குரு குலத்தில் ஒன்றாய் ......
எழுத்தோடு ஒன்றி இருந்தோம்....!
அந் நினைவுகளை.....,
என்னால் மறத்தல்
இயலவில்லை அன்பா ......,
முழுதாய் புரியாமற்
போனது நீ வாழ்ந்த .....
சுற்றாடல் ... சொந்தம்
ஆனாலும் நாங்கள்......,
விழுதாக நின்றுன்.....
பெயர் சொல்லுகின்றோம்...!
வரலாற்றியலக்கியத்தில்
நிலைத்திடுவாய் நண்பா

**முல்லை வீரக்குட்டி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை

# கண்றாவி

வேல்அமுதன்



இது எங்கள் நாட்டுக் கதையல்ல வெளிநாட்டுக் கதை. எந்த நாடு என மட்டும் என்னைக் கேட்டு விடாதீர்கள்.

கதைக்கு நான் நேரே வருகின்றேன்.

எனது நண்பன் ஒருவன் தனது சகோதரிக்குச் சுகமில்லை எனக் கேள்விப்பட்டதும் அந்நாட்டுக்கு அவளைப் பார்க்கப் போயிருந்தான்.

அந்நாட்டுக்குப் போன பிறகுதான் தன் சகோதரி மனநோயாளி என்பதும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதும் அவனுக்குத் தெரிய வந்தது. சகோதரியின் சோகக் கதையை அவன் எனக்குச் சொல்லிய மாதிரியே நான் சொல்லி விடுகின்றேன்.

“அக்கா பாவம்! நல்லவா. ஆனால் வைதீகம். அத்தான் மரணித்ததற்குப் பிறகு தனிமையின் கொடுமையைத் தவிர்க்கத் தனது மூத்த மகளோடை அந்த நாட்டிற்கே போய் அவர்களோடேயே வாழ்ந்தா.

ஒரு நாள் அவசரமாகக் குளியலறைக்குப் போக வேண்டி வந்ததால், குளியலறைக் கதவும் பூட்டப்படாமல் இருந்ததால் அசுமாத்தம் எதுவுமின்றி உள் நுழைந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளை மனநோயாளி ஆக்கியது.

அக்காவின் வயதான பேத்தி குளித்துக் கொண்டு நிக்கையிக்கை அவளின் பின்புறக் காட்சி கண்றாவி. அதாவது பேத்தியின் ஆசனவாய்ப் பகுதியில் மோசமான ஆபாசப் படங்கள்.

“பிள்ளை இது என்ன படங்கள்?” என அக்கா கேட்டிருக்கிறாள். கிடைத்த பதில் அவளை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டுது.

பேத்தி சொன்ன பதில்: “இது அம்மம்மா! என்ரை ‘போய் பிறேண்ட்’ (Boy Friend) கீறிய படங்கள். அவன் ஒரு நல்ல ‘ஆட்டிஸ்ட்’. (Artist)” ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வளம் பெருக்குவோம் - 27

பன்மொழிப்புலவர். த. கனகரத்தினம்

**தமிழ் ஒரு பொருட் சொல்:-**
சொல்வளம் இலக்கியச் செம்மொழிகட்கெல்லாம் பொதுவாகும். தமிழின் சொல்வளம் தலைசிறந்தது. திராவிட மொழிகளை ஒப்பீட்டு ஆய்வு செய்த கால்வெல்டு கண்காணியார் அவர்களே இது பற்றி விதந்துரைத்துள்ளார். தமிழிலுள்ள ஒரு பொருட் சொல் வரிசைகளை மற்றைய திராவிட மொழிகளில் காணமுடியாது. தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரிய சொற்கள் உள. அத்துடன் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரிய சொற்களும் தமிழில் உள. உதாரணமாக பேச்சு வழக்குத் தமிழிலுள்ள ஒரு சொல் 'வீடு' என்பது. இதனோடு தமிழ் அகராதியில் 'இல்', 'மனை', 'குடி' என்ற சொற்களும் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆராயுமிடத்து 'இல்' என்பது தெலுங்கிற்குரியது. 'மனை' என்பது கன்னடத்திற்குரியது. 'குடி' யென்பது வடமொழிக்கும், பின்னிய (Furnish) மொழிக்கும் உரியது! இவை வழக்கிலும் பயன்படுத்தப்படுகின்றன. இவை எதனை எடுத்துக் காட்டுகின்றனவெனின் தமிழ் இலக்கணமும் அகராதியும் திராவிட மொழிகளின் அமைவுகட்கும், வேர்ச் சொற்கட்கும் ஒருபெரும் பொதுக் களஞ்சியமாகும் என்பதையே ஆகும்.

தமிழ்ச் சொல்வளத்தைப் பல துறைகளில் காண முயன்று வருகிறோம். பயிர்வகைச் சொற்கள் சிலவற்றை மட்டும் ஈண்டு சிறப்பாக எடுத்துக் கொள்வோம்.

உதாரணத்திற்கு **'பூ'** என்பதை எடுத்துக் கொள்வோம். பூவின் ஒவ்வோர் நிலையைக் குறிக்க தமிழிற்றான் சொல்வளம் உண்டு. மற்றைய மொழிகளில் இச் சொல்வளம் இல்லை என்பதே அறிஞர்களின் முடிபாகும். பூவின் தோற்ற நிலையைக் குறிக்க **'அரும்பு'** என்றசொல் உண்டு. பூ விரியத் தொடங்கும் நிலையைக் குறிக்கும் சொல் **'போது'** என்பதாகும். பூவின் மலர்ந்த நிலையைக் குறிக்கும் சொல் **'மலர்'** (அலர்) என்பதாகும்.

பூவானது மரஞ்செடிகளிலிருந்து கீழே விழுந்த நிலையைக் குறிக்கும் சொல் **'வீ'** என்பதாகும்.
பூவின் வாடின நிலையைக்குறிக்கும் சொல் **'செம்மல்'** என்பதாகும்.

இவற்றுள் அரும்பை எடுத்துக் கொண்டால் அதிலும் பல வகைகள் உண்டு. அவற்றைக் குறிக்கவும் தமிழ்ச் சொற்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பு போல சிறிதாயும் கூராயும் இருப்பதனைத்தான் **'அரும்பு'** என்போம். மல்லிகை, முல்லைப் பூக்களின் தோற்ற நிலையை அரும்பு என்பர். ஆனால், அடுக்கு மல்லிகை, நந்தியாவட்டை முதலியவற்றின் அரும்பு போல் அற்றுப் பெரிதாயும் மொட்டையாயுமிருப்பது **'மொட்டு'** எனப் பெயர் பெறும்.

தாமரை, சதுரக்கள்ளி முதலியவற்றின் அரும்பு போல் பெரிதாயிருப்பதனை **'முகை'** என்பர்.

இனி பூவின் இதழ் வகையிலும் அகவிதழினை **'அல்லி'** என்பர். புறவிதழினைப் **'புல்லி'** என்பர். சிறியதனை **இதழ்** என்றும். பெரியதனை **மடல்** என்றும் வழங்குவர்.

பிஞ்சு வகையை எடுத்துக்கொண்டாலும் 'பூம்பிஞ்சு', பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, இளநீர், நுழாய்,கருக்கல் முதலிய பல சொற்கள் உள. அவையொவ்வொன்றும் சிறப்பாகப் பிஞ்சின் ஒவ்வொரு நிலையைக் குறிக்கும். இலக்கியவழக்கிலும், பேச்சு வழக்கிலும் அவை நுட்பமான முறையிலே பயின்று வருகின்றன. பிஞ்சு உள்ளம், பிஞ்சு மனம், பிஞ்சிலே பழுத்தவன்,குரும்பைமுலை என்ற சொற்பிரயோகங்களை நாம் காண்கின்றோம்.

**'குரும்பை முலை மலர்க்குழலி கொண்டதவம் கண்டு'**

பூவோடு கூடிய இளம்பிஞ்சினைப் **'பூம்பிஞ்சு'** என்பர். இளங்காயைத் தான் **'பிஞ்சு'** என்பர். மாம்பிஞ்சினை **'வடு'** என்றழைப்பர். பலாப்பிஞ்சினை **'மூசு'** என்றும் எள்ளின் பிஞ்சினை **'கவ்வை'** என்றும் தென்னை,பனை முதலியவற்றின் பிஞ்சினை **'குரும்பை'** என்றும் அழைப்பர். முற்றாத தேய்காய் தான் இளநீர். இளம்பாக்கினை **'நுழாய்'** என வழங்கினர். இள நெல்லினைக் **'கருக்கல்'** என வழங்கினர்.

கனிவகைகளிலும் பலநிலையுண்டு; தெங்கு பூசணி முதலிவற்றின் கனிகளைக் **'காய்'** என்றே வழங்குகின்றோம். பூசணிக்காய், தேங்காய் என்றவாறு, நெல்லி, முந்திரி, முதலியவற்றின் கனிகளை கனிவாயிருப்பதனால் **'கனி'** என்றே வழங்குகின்றோம். முந்திரிக்கனி, நெல்லிக்கனி என்றவாறு, ஆனால் வாழை, மா முதலிவற்றின் கனிகளை (பழுப்பு நிறம் காரணமாக) **'பழம்'** என வழங்குகின்றோம். வாழைப்பழம், மாம்பழம் என்றவாறு, வேர்க்கடலை போன்றதின் முதிர்வை **'நெற்று'** என வழங்குகின்றோம். இங்ஙனம் பொருட்களின் வகைகளெல்லாம் தமிழில் தனிப்பெயர் பெற்றுவளம் பெற்று விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழப்பு

இருப்பின் இரை தேடி
இழந்த நாட்கள் - என்னுள்
பயங்கரமாய் எழ
காலில் தடுக்கி விழ
கவனமாக எழுந்தேன்.

தடைகளாய்ப் போன
தடயங்களைத் தேடி
புறப்படுகின்றேன்
இன்னுமொரு - புனித
பயணத்துக்காக.

எங்கும் இருட்டு அப்பிய
இரவுகள் என்
தேசத்தில் மட்டும்
விடியட்டும் என
காத்திருந்தேன்
வீணாய்போனது நாள்கள்

தொலைந்த தேசத்தில்
தொகுக்கப்படாத
கவிதைகளாய்
துவண்டு விடுகின்றேன்,

## சுவடுகள்

என் நிழலோடு - நீ
வந்த திசை நோக்கி
என் கண்களைத்
தாவவிடுகின்றேன் - அங்கே
மணற்பரப்பிலே மறைந்துபோன
உன் பாதச் சுவடுகள் மட்டும்
ஆர்ப்பாட்டமில்லாத - உன்
பயணம் முடிவாகுமுன்
உனது நகர்வுகள்
நழுவி விட்டதேன்
இன்னும் எனக்குள்
புரியாத புதிராய்
விடைகளைத் தேடுகின்றேன்.
குருதியுறைய வைத்த - உன்
சாட்சிகள் மண்ணுக்குள்
மணல் மேடாய்
மறைந்துகொண்டிருப்பதாக
எனக்குள் ஓர் ஐயம்
தூசு தட்டப்படும் - நம் தேசம்
இன்னும் நாசுக்காக
நகரும் வேதனைகள்
நாமும் தொடர்வோம் - அந்த
சுவடுகளைத் தேடி...................
....................

த.குமுதினி
மண்டூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






– கோத்திரன்

# குடிதழீஇய கோன்

அரசியலை அயோக்கியர்களின் இறுதிப்புகலிடம் என்றவர் அறிஞர் பெர்னாட்ஷா. அவருடைய அருமை நண்பர் வின்ஸ்டன் சேர்ச்சிலை கிண்டல் செய்யவே அவர் அப்படிச் சொன்னதாகச் சிலர் சொல்வதுண்டு. பயணத்திற்கே பணம் இல்லாதவர்கள் என அறியப்பட்ட பலர் பதவிக்கு வந்த பின் பல கோடிகட்குச் சொந்தக்காரர்கள் ஆனார்கள் என்பதும் நிரந்தரமாக எந்தத் தொழிலும் இல்லாதவர்கள் அரசியலுக்கு வந்த பின் ஆகாய விமானத்தைச் சொந்தமாக வைத்திருந்தார்கள் என்பதும் அண்மைக் காலத்தில் நாம் அறிந்தவை. ஆனால் இந்தப் பந்தியில் எழுதப்படும் தோமஸ் ஆபிரகாம் லிங்கன் என்ற பெருமகன் இரு தடவைகள் சட்ட சபையிலும் இரண்டு முறை காங்கிரஸ் மேல் சபையிலும் அப்புறம் இரு தடவைகள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக வெள்ளை மாளிகையில் வீற்றிருந்த பின்னும் அவர் சொத்துக்களின் பெறமதி 15600 டாலர்களைத் தாண்டவில்லை என்பதுான் சரித்திரச் சான்றாகிறது. ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் உலகம் முழுதும் உள்ள பன்நாட்டு மக்களாலும் தங்கள் ஜனாதிபதியாக மதிக்கப்பட்டார் எனின் அந்தப் பெருமை இன்றுவரை லிங்கன் அவர்களுக்கே உண்டு.

அவருடைய காலத்தில் வில்லியம் ஸ்காட் என ஒரு இராவணுவச் சிப்பாய் இருந்தான். அமெரிக்காவில் நான்கு ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்த உள் நாட்டுப்போரின் உக்கிரமான நேரம். ஸ்காட் கடமை தவறாதவன். இவனுடன் பணியாற்றிய சக இராணுவச் சிப்பாய் ஒருவனுக்குத் திடீரென உடல் நலம் குன்றியது. கடமைக்கு வர முடியாத நிலை. இவனே அவனது கடமையையும் மனமுவந்து மேற்கொண்டான். மறு நாள் மீண்டும் இவனது கடமை நாள். இவன் தலைமை அதிகாரியிடம் போனான். மூன்றாம் நாள் வேலை என்பதால் கடமை நேரத்தில் கண்ணயர நேரிடலாம். இன்று மாத்திரம் ஒரு நாள் விடுமறை தாருங்கள் என விநயமாக வேண்டி நின்றான். அந்த அதிகாரி கண்டிப்பானவன். இவனது கோரிக்கையை ஏற்கவில்லை. வேறு வழியின்றி மூன்றாம் நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து கடமையாற்ற வேண்டி வந்தது. அந்தக் கடமையின் நேரம் அவன் சிறிது கண்ணயர நேர்ந்தது. அதை அவதானித்த மேலதிகாரி தனது உயர் அதிகாரிக்கு தகவல் அனுப்பினான் குற்றச்சாட்டாக. யுத்த காலத்தில் கடமையில் தூங்கும் வீரனுக்கு மரணதண்டனை கொடுப்பதுதான் அன்றைய நடைமுறைச் சட்டம். அவனுக்கும் மேலிடத்தில் இருந்து அதே தீர்ப்புத்தான் வந்தது.

அவனது சகாக்கள் அவனுக்காகத் தங்கள் மேலிடத்தில் மன்றாடினார்கள். வழங்கப்பட்ட தண்டனை மாற்றப்படுவதானால் அல்லது மன்னிக்கப்படுவதானால் அது ஜனாதிபதி ஒருவராலேயே முடியும் என அறிவிக்கப்பட்டது. அவனது நண்பர்கள் அவனுக்காகக் கருணைமனு ஒன்று தயார் செய்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர். அந்த மனுவையும் அதற்கு ஆளான காரணத்தையும் ஜனாதிபதி ஆராய்ந்தார். எவருக்கும் தெரியாமல் அவனது ஊர், அவனது பெற்றோர், அவன் படித்த பாடசாலை என எல்லாவற்றிலிருந்தும் விபரங்கள் தேடிக் கொண்டார். அதன்பின் திடீரென ஒரு நாள் அவன்முன் நேரில் நின்றார். அவனைப் பார்த்து "உன் தாயாரைத் துக்கத்தில் ஆழ்த்தாதே" என்றார். அவன் வெறுமையாகச் சிரித்தான். தன் முன் நிற்பது அமெரிக்காவின் ஜனாதிபதி என்பதை அவன் அறியான். "நான்தான் நாளை சுட்டுக் கொல்லப்படும் சிப்பாய் ஆயிற்றே." என்றான் விரக்தியுடன். "நீ நாளை சாகப் போவதில்லை. உன் கடமைக்குத் திரும்பப் போகிறாய். நிச்சயமாகச் சொல்கிறேன்" என்றவர் மீண்டும் தொடர்ந்து பேசினார். "இதை உனக்குச் சொல்பவர் உன் ஜனாதிபதி! நம்பமாட்டாயா?" என்றார். அவன் விக்கித்துப் போனான். ஜனாதிபதி தொடர்ந்தார். "நான் பிரயாணம் செய்து வந்த செலவை நீ தான் வழங்க வேண்டும். கொடுக்க முடியுமா?" எனக் கேட்டார். அவன் சொன்னான்; "சேர் என்னிடம் சேமிப்புக் கணக்கில் சிறிது பணம் உண்டு. என் நிலத்தின் பேரிலும் நண்பர்களிடமும் கடன் வாங்க முடியும். உங்களுக்கு உரியதை நிச்சயம் தந்துவிடுவேன். என்னை நம்புங்கள்" என்றான். அவனது தோள்களைப் பற்றிய ஜனாதிபதி சொன்னார்; "ஸ்காட் உனது வங்கிச் சேமிப்பும் நிலத்தின்பேரில் வாங்கும் கடனும் நண்பர்கள் தரும் தொகையும் என்னுடைய செலவைச் சரி செய்யாது. 'ஸ்காட்' என்கிற இராணுவ வீரனால் நாட்டிற்குத் தன் கடமையைத் தொடர்ந்து செய்வதால் மாத்திரமே சரிக்கட்ட முடியும்" என்றார். ஸ்காட் அவர் முன் மண்டியிட்டுக் கண்ணீருடன் சொன்னான்; "சேர் அப்படியே செய்வேன்" என்று. மறுநாட் காலை பத்திரிகைகளின் முன்பக்கச் செய்தியாக இப்படி வந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'ஒரு சாதாரண இராணுவ வீரனுக்கு ஜனாதிபதி நேரில் சென்று மன்னிப்பு வழங்கினார்."**

1862ம் ஆண்டின் நடுப்பகுதியில் இச்சம்பவம் நடந்தது. 1861 ம் ஆண்டு மார்ச் 4ந் திகதி அமெரிக்காவின் ஜனாதிபதியாக லிங்கன் பதவி ஏற்கிறார். வெள்ளை மாளிகையில் குடியேறுகிறார். அங்கே தொடரும் ஒரு காட்சியில் அவர் சலித்துப் போகிறார். மாளிகையின் முன்றலில் குதிரைப் படை வீரர்கள் எப்போதும் எதற்கும் தயாராக நிறுத்தப்பட்டிருந்தனர். அவர் வரும் போதும் வெளியேறும் போதும் வீர முழக்கத்தோடு இராணுவ மரியாதை நடந்தது. ஒரு நாள் அந்தக் குதிரைப் படையின் தளபதியைத் தன் அறைக்கு அழைத்து "உங்களிடம் ஒரு விடயம் பேச வேண்டும்" என்றார். "சொல்லுங்கள் மிஸ்டர் பிரசிடெண்ட்" எனப் பணிவாக நின்றார் தளபதி. "நான் வரும் போதும் செல்லும் போதும் அணி வகுப்பு மரியாதை செய்கிறார்களே ஏன்?" என்றார். "அது வழமையாக இருந்து வருகிறது" என்றார் தளபதி. "அந்த மரியாதை எனக்கு வேண்டாம். ஏனெனில் நான் அரசனோ குறுநில மன்னனோ அல்ல. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களில் ஒருவன். புரிகிறா?" என்றார். தொடர்ந்தவர் "குதிரைப் படை வீரர்களை அங்கிருந்து அகற்றுங்கள்" என உத்தரவிட்டார். "அப்படியே ஆகட்டும்" என்றிட்டார் தளபதி. இன்றைய பல நாடுகளின் ஜனாதிபதிகளைப் பார்க்கும் நமக்கு இது மிக மிக வியப்பான செய்தியல்லவா. ஆனால் நடந்தது.

ஒரு பழைய நண்பர். லிங்கனின் ஆரம்ப கால வாழ்வினில் அறிமுகமானவர் ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்து லிங்கனைப் பார்க்க வெள்ளை மாளிகைக்கு வந்திருந்தார். வாசல்வரை வந்து அவரை வரவேற்றார் ஜனாதிபதி. அந்த நண்பர் "குட்மானிங் மிஸ்டர் பிரஸிடெண்ட்" என்றார். லிங்கன் அவரை ஒரு கணம் உற்றுப் பார்த்தார். "ஸ்பிரிங்ஃபீல்டில் இருந்த போது நீங்கள் என்னை எப்படி அழைப்பீர்கள்". அந்த நண்பர் தயங்கிக் கொண்டே சொன்னார். 'ஏப்' அல்லது 'லிங்கன்' எனக் கூப்பிடுவேன் "இப்போது மட்டும் ஏன் என்னை மிஸ்டர் பிரஸிடெண்ட் என அழைக்கிறீர்கள். எப்போதும் போல லிங்கன் என்றே கூப்பிடுங்கள். அப்படிக் கூப்பிடுவதுதான் எனக்குப்பிடிக்கும்" என்றார் இவர். வந்தவருக்கு லிங்கனின் எளிமையும் நட்பின் உயர்வும் தெரிந்தது.

இவரின் முன் பதவி வகித்த எவரும் (ஆன்ட்ரூஜான்சனைத் தவிர) ஒரு முறைக்கு மேல் பதவிவகிக்கவில்லை. லிங்கனே இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். இரண்டாவது தடவை போட்டியிட்ட காரணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மக்கட்கு எடுத்துச் சொன்னார் ''உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்த பின் அமைதியை நிலை நாட்ட வேண்டும். தென் மாநிலங்களை ஒழுங்குபடுத்தி அமெரிக்க யூனியனுடன் இணைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதாரத்தையும் தொழில் வளத்தையும் பேண வேண்டும்'' என்று. மக்கள் அவரை நம்பினார்கள். அரசியல் வாதிகளின் பலத்த எதிர்ப்பினூடே அவர் பதவிக்கு மீண்டும் தெரிவானார் என ஒரு முக்கிய குறிப்பு இருக்கிறது.

லிங்கன் நகைச்சுவையும் அதே போன்று கிண்டலாகவும் பேச வல்லவர். வெள்ளை மாளிகையில் அவரது வாசம் அநேகமாக ஒரு அறையில் தான் இருக்கும். அதிக நேரம் அங்கு தங்குகிறவர். அலுவல்களையும் சில வேளைகளில் அங்கிருந்தே கவனிப்பார். சில வேளை அங்கேயே தூங்குவார். பார்க்க வருபவர்களையும் அழைத்தும் பேசுவார். இப்படி ஒரு நிகழ்வு நடந்தது. ஒரு வெளி நாட்டுத் தூதுவர். அவர் லிங்களை அதிகம் விரும்புகிறவர் அல்ல. இவரைப் பார்க்க வந்தார். லிங்கன் தன் அறைக்குள் அழைத்தார். அங்கு போன அந்தத் தூதுவர் ஆச்சரியப்படும் அந்த நிகழ்வைக் கண்டார். ஜனாதிபதி தன்னுடைய சப்பாத்துக்களை பாலிஸ் செய்து கொண்டிருந்த காட்சிதான் அது. தூதுவர் கேட்டார் ''மிஸ்டர் பிரஸிடெண்ட் உங்கள் சப்பாத்துக்களை நீங்கள் தான் பாலிஸ் செய்வீர்களா?'' ஜனாதிபதிக்கு அந்த அக்கறையான விசாரிப்பின் வினை விளங்கியது. சட்டென்று நிமிர்ந்தவர் கேட்டார் ''அன்பரே நீங்கள் யாருடைய சப்பாத்துக்களை பாலிஸ் செய்வீர்கள்'' என்று. கேட்டவரின் முகத்தில் அசடு வழிந்தது.

லிங்கன் சட்டசபைத் தேர்தலில் நின்ற நேரம். ஒரு இடத்தில் நடந்த தேர்தல் கூட்டத்தில் மக்கள் முன்பு நீண்ட நேரம் பேசினார். மக்கள் அயராது அலுக்காது கேட்டுக் கொண்டிருந்தனர். இந்த ஆச்சரியத்தை மேரி டாட் என்ற பெண்ணும் கேட்டுக் கொண்டிருந்தாள். கூட்டம் முடிந்தது. லிங்கன் இப் பெண்ணிடம் வந்தார். ''மேரி என் பேச்சைக் கேட்டாயா? இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆவேனா?'' என்றார். சில விநாடிகள் அமைதியாக இருந்த மேரி டாட் லிங்களை குறும்பாகப் பார்த்து விட்டுச் சொன்னார்; ''உங்கள் பேச்சைக் கேட்டேன். நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஆவீர்களோ மாட்டீர்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் ஒரு நாள் இந்த நாட்டிற்கு ஜனாதிபதி ஆகிவிடுவீர்கள்! இந்த மேரிடாட் தான் பின் நாளில் வெள்ளை மாளிகையில் திருமதி லிங்கனாக அமெரிக்கக் குடியரசின் முதற் பெண்மணியாக அளப்பரிய சேவை ஆற்றியவர். போர்க்களம் வரை போனவர். மேரி டாட் தென் மாநிலத்தைச் சேர்ந்தவர். வசதிமிக்க குடும்பத்தில் இருந்து வந்தவர். அவருடைய மூன்று சகோதரர்கள் போரில் இறந்து போனார்கள். ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கணவர் பக்கமே இருந்தார். யூனியன் படைகள் காயப்பட்டபோதெல்லாம் அவர்களுக்கு ஆறுதல் சொல்லப் போனார். அவர்மேல் களங்கம் கற்பிற்க அரசியல் எதிரிகள் முயன்றபோது அவர் தானாகவே முன் வந்து தெரிவுக் குழுவின் முன் சாட்சியமளித்து தனது விசுவாசத்தை மெய்ப்பித்தவர். அவர் ஆடம்பரப்பிரியவராயினும் தன் கணவனுக்கும் அவர் அரசியலுக்கும் களங்கம் ஏற்படுத்தவில்லை. ஆயினும் இவர்களின் வாழ்வு முட் படுக்கையாகவே இருந்தது என்பதுதான் லிங்கனின் கருத்தாக இருந்தது. ஏனெனில் இவரது டாம்பீகத்துடன் அவரது எளிமை இறுதி வரை ஒத்துழைக்கவே இல்லை.

லிங்கனின் மூத்த மகனான ராபர்ட் ஹவார்ட் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவா். இராணுவத்தில் பணியாற்ற வேண்டுமென்ற ஆசை வந்தது. தன் தந்தையிடம் நேரில் தன் ஆசையை வெளியிட்டார். ''பார்க்கலாம்'' என்றார் லிங்கன். மகன் போனதும் தலைமைத் தளபதி 'கிராண்ட்' டுக்கு ஒரு மடல் வரைந்தார். ''என் மகன் இராணுவத்தில் சேர விரும்புகிறான். என்னை ஜனாதிபதியாக நினைத்துக் கொள்ளாமல் ஒரு நண்பனாக நினைத்துச் செய்யுங்கள். மற்றய அதிகாரிகட்கு எந்தப் பாதகமும் இல்லாமல் ஏற்ற வேலை அவனுக்கு இருந்தால் இராவணுவத்தில் இடமளிக்கலாம்.'' என்றிருந்தார். லிங்கன் என்ற ஜனாதிபதி தன் தளபதிக்கு விநயமுடன் எழுதிய இந்தக் கடிதம் அவரின் நேர்மைக்கும் தலையீடற்ற நிர்வாகத்துக்கும் ஒரு இலக்கணமாகும்.

1865 ஏப்ரல் 9ம் நாள் தளபதி 'கிராண்டி' டம் 'லீயீ' தலைமையிலான தென் மாநிலப் படைகள் முற்றாகச் சரணடைந்தன. நான்கு ஆண்டுகள் நடந்த உள் நாட்டுப் போர் ஒரு முடிவுக்கு வந்தது. லிங்கனின் அமெரிக்க யூனியன் படையில் 360, 000 பேர் இறந்தனர். 275000 பேர் வரை காயப்பட்டனர். தென் பகுதிப் படையில் 258000 பேர் இறந்தும் 137000 பேர் காயமுற்றும் இருந்தனர். தென் பகுதி அடிமை முதலாளிகளின் பண்ணைகளைப் பறிமுதல் செய்ய வேண்டும். அவர்களது வாக்குரிமையைப் பறிக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் வலுத்தன. லிங்கன் அதற்குச் செவி சாய்க்க மறுத்து விட்டார். ''தென் மாநிலங்கள் நம்மைவிட்டுப் பிரிந்து இருந்ததாக நாம் நினைக்க வேண்டாம். அவர்களுடன் கைகுலுக்குவோம். நல்ல உறவை வளர்த்து எதிர்காலத்தில் அம் மாநிலங்கள் அமெரிக்க யூனியனுடன் ஒற்றுமையாக இணையட்டும். எனது அறை கூவல் இதுவே'' என்றிட்டார் லிங்கன். அன்று அவர் அந்தப் பழிவாங்கும் எண்ணங்கட்குப் பணிந்து போயிருந்தால் இன்று USA என்ற அமெரிக்க ஐக்கிய குடியரசு வல்லரசு நிலைக்கு வளர்ச்சி பெற்றிருக்கவும் உலகத்தின் பொலிஸ் காரனாகவும் வந்திருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஜனாதிபதிகளுள் லிங்கன் போல் அநேக சர்ச்சைகளுக்குள்ளான வேறு எந்த ஜனாதிபதியும் இல்லை. எனினும் அவர்போல் பேசப்பட்டவரும் இல்லை. ஜே.மொனாகன் (Jey Monagan) என்பவர் கூற்றுப்படி 1939 க்கு முன்பு வரை லிங்கனைப் பற்றிய வெளியீடுகள் 1079 பக்கங்கள் வரை நீண்டிருந்ததாம். இவரது பிறந்த தினம் 1809 பெப்ரவரி 12. தந்தையார் தாமஸ் லிங்கன். தாயார் நான்ஸி. சிறு வயதில் இருந்தே வறுமையில் வாழ்ந்தவர். ஒரு விறகு வெட்டித் தொழிலாளியின் மகன். பல தொழில்கள் செய்து படித்து வக்கீலானார். இரண்டு தடவை மாநிலச் சட்ட சபையிலும் இரண்டு தடவைகள் அமெரிக்க காங்கிரஸிலும் அதேபோல் இருமுறை ஜனாதிபதியாகவும் பணியாற்றியவர். மக்களால் நேசிக்கப்பட்ட மா மனிதர். தன் பதவியை 'முள் கிரீடம்' என வர்ணித்தவர். தன் வாழ்க்கையைப் 'போராட்டம்' என்றவர். தன் திருமணத்தைத் 'தற்கொலை' எனவும் சொன்னவர். வாழ்நாளில் பல தோல்விகளைக் கண்டவர். முயற்சியில் குன்றாதவர். மன்னிக்கும் மகத்தான சுபாவத்தைக் கொண்டவர். இராணுவத்திலிருந்து தப்பியோடிய குற்றச் சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை வாழவைத்தவர். அப்படிப் பலரை வாழ வைத்த இந்தப் பரோபகாரிக்கு கொடுமையான முடிவே காத்திருந்தது. 1865 ஏப்ரல் 14 இல் ஜான் வில்கிஸ்பூத் என்பவனால் நாடகக் கொட்டகையுள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இயற்கையாகவே சங்கீதம், நாட்டியம், நாடகம் எனக் கலைப் பண்பின் உறைவிடமான அவரது நடமாட்டங்களே எதிரி இவர்மேல் குறி வைக்க ஏதுவாயிற்று. லிங்கனின் இறுதி முடிவு கரை காண முடியாத கண்ணீர்க் காவியம்.

அரசன் அதிகாரத்தைச் செலுத்தும்போது மக்களும் சுற்றமும் துணுக்குற்று அஞ்சும்படியான செயல்களை செய்யாமைதான் வள்ளுவத்தின் வாழ்க்கை நெறியாகும்.

குற்றத்துக்குத் தக்க தண்டனையை ஆராய்ந்து அக் குற்றத்தைச் செய்தவன் தொடர்ந்து அதைச் செய்யாத வகையில் அவனை உலகமும் ஏற்கும் வண்ணம் குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டிப்பவனே ஆள்பவன் என்கிறார் வள்ளுவார். லிங்கன் என்ற அந்த மா மனிதர் வள்ளுவர் வார்த்தையுள் இப்படி உள்படுத்தப்பட்டிருக்கிறார்.

**"தக்காங்கு நாடித் தலைச் செல்லா வண்ணத்தா**
**லொத்தாங் கொறுப்பது வேந்து"**

(வெருவந்த செய்யாமை - குறள் : 561)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொடர் நாவல்**

# மீண்டும் ஒரு காதல் கதை

## 08



- திருக்கோவில்
**யோகா.யோகேந்திரன்**

தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ராதா தான் வர வேண்டி ஏற்பட்ட சூழ்நிலை பற்றிக் கூறினாள்.

தமையனின் பேச்சுக்குரல் கேட்டு வெளியில் வந்த நேத்ரா அவனது கோபம் புரியாமல் வெகுளியாகச் சிரித்துக் கொண்டு நின்றாள். சீனுவோ இந்தம்மா வலிய வந்து தெய்வம் கணக்கா உதவி பண்றாங்க. அவுங்க பாப்பா கிட்ட எத்தின பிரியமா இருக்காங்க. இந்த அய்யா ஏன் கண்டுக்க மாட்டேங்கிறாரு? என்று தன் பாட்டில் முணுமுணுத்துக் கொண்டான்.

ராதா கூறிய விளக்கத்தைக் கேட்ட ஜயலத் சாந்தமடைந்தான். தன் அவசர புத்தியை நொந்து கொண்டவனாக "வெரி சொறி டாக்டர். நெலம தெரிஞ்சுக்காம முட்டாள் கணக்கா ஒங்களக் கோவிச்சுக் கிட்டன். என்னிய மிச்சம் மன்னிச்சிடுங்க."

"பரவாயில்லை மிஸ்டர் ஜயலத். பாப்பாவுக்கு காய்ச்சல் குறைஞ்சிருக்கு. அவ மிச்சம் பலவீனமா இருக்கா. மனசளவிலயும் அவ பாதிக்கப்பட்டிருக்கா. உடல் பலவீனத்தைக் குணப்படுத்தலாம். மனப் பாதிப்பை மருந்துகளால் குணப்படுத்த முடியாது. பிள்ளை உடலாலும் மனசாலும் குணப்பட வேணுமென்றால் நீங்க தான் பிடிவாதத்தை விட்டு அவளின் ஏக்கத்தைப் போக்க வேணும். சரி நேரமாகுது. நான் வீட்டிற்குப் போக வேணும். எனக்கூறியபடி வெளியில் வர அடியெடுத்து வைத்தாள். அப்போது விழித்துக் கொண்ட குழந்தை "அம்மி.. அம்மி" என பரிதாபமாக அழைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் சென்ற ராதா குழந்தையின் குரல் கேட்டுக் கதவருகில் தயங்கியபடி நின்றாள்.

"தாத்தி மட்ட அம்மி ஓன தாத்தி" (அப்பா ... எனக்கு அம்மா வேணும் அப்பா)

"அம்மி எனவா துவ. ஓயா தங் நிதாகன்ன" (அம்மா வருவா. மகள் இப்போ நீங்க நித்திரை செய்யுங்க)

"பொறு கியன்ட எப்பா தாத்தி.. மட்ட அம்மி ஓன. அய் தாத்தி அம்மி மாவ தாலா யன்னே ? (பொய் சொல்லாதீங்க அப்பா. எனக்கு அம்மா வேணும். ஏன் அப்பா என்னைவிட்டு அம்மா போறா)

சொல்லும் போதே அழ ஆரம்பித்த குழந்தை பெருங்குரலெடுத்து அழுதது. குழந்தையின் உருக்கமான வேண்டுகோளையும் அவன் கூறிய பொய்ச் சமாதானத்தையும் கேட்டுக் கொண்டு வெளியில் கதவோரமாக நின்ற ராதாவுக்கு உள்ளே போக முடியாமலும் வெளியேற முடியாமலும் தவிப்பாக இருந்தது. அது அழ ஆரம்பித்ததும் மேலும் சங்கடமாக இருந்தது.

அழுதபடி கதவுப்பக்கம் பார்த்த குழந்தை ராதாவைக் கண்டு விட்டது. அவள் பக்கமாகக் கைகளை நீட்டியபடி "அம்மி!.. எனக் கதறிக் கொண்டே மயக்கமாகிப் போனது.

வெளியிலிருந்து ஓடி வந்த ராதா குழந்தையைத் தூக்கி மடியில் வைத்த ஜயலத்தின் தோள்களைப் பிடித்து உலுக்கி "எத்தனை காலத்துக்கு இந்தப் பச்சைக் குழந்தையைத் துடிதுடிக்க வைக்கப் போறீங்க ஜயலத்? செத்துப்போன உங்க மனைவிக்காக இந்த குழந்தையைச் சாகடிக்கப் போறீங்களா?" தன்னை மறந்தவளாகச் சத்தமிட்டவளின் குரல் உடைந்து அழுகைக்குத் தயாரானது.

சில விநாடிகளில் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட ராதா குழந்தையின் மயக்கத்தைத் தெளிய வைக்கும் முயற்சியில் ஈடுபட்டாள். நேத்ராவும் சீனுவும் அவளுக்கு உதவினர்.

சிறி நேரத்தில் கண் விழித்த குழந்தை ராதாவை அருகில் கண்டதும் மெல்லச் சிரித்தவாறு அவளது கரத்தைப் பற்றியபடி நிம்மதியுடன் தூங்க ஆரம்பித்தது.

ராதாவுக்குச் சகிக்க முடியவில்லை. குழந்தை கண் விழித்ததும் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தேடி அழுவது நிச்சயம். என்ன கொடுமை இது? என எண்ணியவள் தன்னை மறந்தவளாக "இந்தக் குழந்தைக்குத் தாயாக இருக்க எனக்காவது சந்தர்ப்பம் தர மாட்டீர்களா ஜயலத்? என்று கேட்டாள்.

அவள் என்ன அர்த்தத்தில் அப்படிக் கேட்கிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. "கொளந்தையப் பிரிஞ்சு நம்பளால இருக்க முடியாது மிஸ்ராதா" என்றான் கவலையுடன்.

"குழந்தைய உங்க கிட்ட இருந்து பிரிச்சு எடுக்க நான் நினைக்கல ஜயலத்."

"அப்படீன்னா நீங்க என்னதான் சொல்றீங்க? நமக்குப் புரியலியே?" குழப்பத்துடன் கேட்டான் ஜயலத்.

"உங்க சித்ரா விட்டுப்போன இடத்தை எனக்குக் குடுங்க என்று கேட்கிறேன் ஜயலத்."

பதறியபடி எழுந்தான் ஜயலத். "ஒங்களுக்கென்ன பயித்தியங் பிடிச்சிருக்கா டாக்டர். தயவுசெஞ்சு இப்பிடி நினைக்காதீங்க. கதைக்காதீங்க. நாம கலியாணங் கட்டின ஆளு. ஒரு புள்ளக்கி அப்பா. ஒங்களுக்கு நாம கொஞ்சங் கூட சரிபட்டு வாறது இல்லே. நீங்க யாரு? ஒங்க மதிப்பு மருவாதை என்ன? நல்லா யோசின பண்ணிப் பாருங்க. இது எவ்வளவு தப்பு பேச்சுங்கிறது வௌங்கும். வேனும்னா நம்ம கொளந்தைய நீங்க இப்பவே எடுத்துக்கிட்டுப் போங்க."

ராதா தன்னை மறந்தாள். தன் நிலையை மறந்தாள். கண்ணனை மறந்தாள். ஜயலத்தின் இரு கரங்களையும் பற்றியவளாக கண்கள் பனிக்க "குழந்தையோடு உங்களையும் நான் நேசிக்கிறேன் ஜயலத். எனக்கு குழந்தையோடு நீங்களும் வேணும்."

பேச முடியாமல் திகைப்புற்று நின்றான் ஜயலத். இவளுக்கு என்ன வார்த்தை சொல்லி அவளது எண்ணத்தைத் தவறு எனப் புரிய வைக்கலாம் என அவன் யோசித்தபடி மௌனமாக நின்றான்.

அவளே தொடர்ந்தாள். "முதன் முதலாக கடற்கரையில் உங்கள் மகள் என்னை அம்மா எனக் கதறியபடி ஓடி வந்தபோதே நான் குழம்பிப் போனன் ஜயலத். வீட்டிற்கு வந்து உங்க மனைவியின் படத்தைப் பார்த்தபோது எனக்கு மேலும் தடுமாற்றமாகிப் போனது. எனக்குள் ஒரு சலனம் ஏற்பட்டு என்னை நாளடைவில் வெகுவாக மாற்றிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கெல்லாம் இந்த உருவ ஒற்றுமைதான் காரணமா அல்லது வேறு ஏதும் காரணமா என்று எனக்குப் புரியல்ல. ஆனா என் மனசு உங்களையும் குழந்தையையுமே சுற்றி சுற்றி வருகுது. அதை என்னால எப்படியும் தடுக்க முடியல்ல. என்னை நம்புங்க ஜயலத்.''

அவளது பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துப் போய் நின்றிருந்த ஜயலத்திற்கு அவளை முழுமையாகப் புரிந்தது. உள்ளத்து உணர்வுகளை எழுத்தில் வடிக்கும் எழுத்தாளன் ஒருவனுக்கு இது கூடவா புரியாது? தனது 'புஞ்சி அம்மா' என்ற நாவலில் தன்னால் படைக்கப்பட்ட அந்நாவலின் நாயகி ரத்தியை நினைத்துப் பார்த்தான் அவன். தன் கற்பனைப் படைப்பு நிஜ உருப்பெற்றது போலக் கண்ணெதிரே நின்றிருந்தாள் ராதா. உன் படைப்புக்கள் வெறும் கற்பனையல்ல. அவை உண்மை. மனிதர்களின் பிம்பங்கள் என்று கூறுவது போலத் தோன்றியது அவனுக்கு. ஒரு படைப்பாளி என்ற வகையில் அவன் பெருமிதப்பட்ட போதும் ஒரு மனிதாபிமானமுள்ள மனிதன் என்கின்ற வகையில் ராதாவின் கோரிக்கையை அவனால் கொஞ்சம் கூட ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவள் மீது ஒரு பச்சாத்தாப உணர்வு மேலிட அவளது தாடையை நிமிர்த்தி ''என்ன பொண்ணும்மா நீங்க? இப்படி ஏன் நெனைக்கீங்க? இந்த நெனப்பு தப்பும்மா. ரொம்பத் தப்பு. ஓங்கள மாதிரி ஒரு டொக்டர நீங்க கட்டுறது தான் சரியா வரும். நீங்க நல்ல பொண்ணு. ஓங்களுக்கு இப்படி நெனப்பு வர நாம காரணம்னா நம்மள மன்னிச்சிடுங்க. நாம ஓங்களுக்குச் சரிப்பட்டு வர முடியாது. நாம ஓங்களுக்கு வேணாம்.'' என்றான் பரிவுடன்.

அவன் பேசுவதை அவள் பார்த்துக் கொண்டே நின்றாள். அவளது விழிகள் சித்ராவின் விழிகளாக அவனை ஆகர்ஷித்தன. அவளது மனசு அவனுக்கு முழுமையாகப் புரிந்தது. ஆயினும் அவளது மனசைப் புரிந்து கொண்டதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை.

''ஜயலத் தயவு செய்து எனது தகுதியையோ தொழிலையோ பற்றி எதுவும் பேசாதீங்க. அதெல்லாவற்றையும் விட நான் குழந்தையையும் உங்களையும் நேசிக்கிறன். எனக்கு சொந்த மச்சான் ஒருவர் டாக்டராக இருக்கிறார். சின்ன வயசிலிருந்தே எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்யவேணுமென பெரியவங்க முடிவு செய்திருக்காங்க. ஆனாலும் நான் உங்கள விரும்புறன்.''

''ஐயையோ.... அப்பிடீன்னா ஓங்க மச்சான் கிட்ட ஓங்களுக்கு விருப்பம் கெடையாதா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மிச்சம் நல்லவர். அவருக்கு என் மேல மிச்சம் விருப்பம். எனக்கும் அவர்மேல் அன்பும் விருப்பமும் இருக்கு. ஆனா கல்யாணம் கட்டுவது பற்றி எனக்கு அப்படியொன்றும் ஆர்வமில்ல. ஆனா அவருக்கு என்னைக் கலியாணம் கட்ட விருப்பம்.

"ஏன் ஒங்களுக்கு விருப்பம் இல்லே?"

"தெரியல்ல."

ஜயலத்திற்கு அவள் மனசின் புரியாத பகுதிகளும் புரிந்தன. அவனது இன்னுமொரு நாவலான 'ரூபினி கொஹேத யன்னே?' என்கின்ற நாவலில் வரும் கதா நாயகி ரூபினி தனது முறை மாப்பிள்ளையை மணந்து கொள்வதில் நாட்டமின்றி வேறு ஒருவனை விரும்பி மணப்பதாக அவன் படைத்திருந்தான். அக்கதையில் அந்த முறை மாப்பிள்ளையும் ரூபினி என்னும் முறைப் பெண்ணை மணக்க விரும்பாமல் வேறொரு பெண்ணை மணக்கிறான். ஆனால் இங்கே இவளது மச்சான் இவளுக்காகக் காத்திருக்கிறான். அதுதான் வித்தியாசம்.

கற்பனைக் கதைகளில் வரும் பாத்திரங்கள் அவற்றின் குணாம்சங்கள் எதிர்பார்ப்புக்கள் விருப்பு வெறுப்புக்கள் சமூக மாந்தரிடையே உள்ளதுதான். கதைகளில் வரும் சம்பவங்கள் எங்கோ நடந்தையாகவோ நடப்பவையாகவோ நடக்கப் போகின்றவையாகவோ இருக்கலாம். இதை ஜயலத் அறியாதவனல்ல. கதை வேறு வாழ்க்கைவேறு அல்ல என்பதைப் புரியாதவனும் அல்ல. ஆனால் ராதாவின் வேண்டுகோளை ஏற்க அவனால் முடியவில்லை. கொஞ்சம் கூட ஈடுபாடில்லாத ஒரு விடயத்தில் நடு நிலையான சிந்தனை ஏற்படுவது எப்படிச் சாத்தியம்? அதே சாத்தியமற்ற மனோ நிலைதான் ஜயலத்திற்கு இருந்தது.

"ராதா ஒங்களுக்காக காத்துகிட்டு இருக்காரே ஒங்க மச்சான். அவரு ஒங்கட நெனப்ப அறிஞ்சா துடிச்சுப் போயிட மாட்டாரா?"

"அவர்ர கதை இருக்கட்டும். நீங்க என்ன சொல்றீங்க. முதல்ல அதைச் சொல்லுங்க"

"நான் அந்த மாதிரி தப்பான ஆளு கெடயாது. ஒரு சின்னப் பொண்ணை நல்ல பொண்ணை. வசதியான வூட்டுப் பொண்ணை ஏமாத்தி கலியாணம் கட்ட நானு ஒரு நாளும் ஆசப்பட மாட்டன். நீங்க ஒங்க தப்பான முடிவ மாத்திங்கோங்க ராதா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை ஜயலத். இந்த விசயத்தில் மாற்றிக் கொள்ளவோ யோசிக்கவோ எதுவுமில்லை. இது என்னோட தீர்மானம். நீங்கதான் யோசிச்சு முடிவு எடுக்க வேணும். சரி நேரமாகுது. சாப்பிட அம்மா காத்துக் கொண்டிருப்பா நான் போறன்" ராதா புறப்பட்டாள்.

சிலையாக நின்றான் ஜயலத். அவனது மன உறுதியை ஆட்டம் காணச் செய்துவிட்டுப் போய் விட்டாள் அவள்.

ஜயலத்திற்கும் ராதாவுக்கும் நடந்த உரையாடலை முழுமையாகப் புரிந்து கொள்ளக் கூடியளவுக்குத் தமிழறிவு நேத்ராவுக்குக் கிடையாது அரைகுறையாக அவ்வுரையாடலைப் புரிந்தும் புரியாமலும் திருதிருவென முழித்த அவள் அது பற்றித் தமையனிடம் கேட்டபோது அவன் சொன்ன பதில் அவளை ஆச்சரியப்பட வைத்தது.

தனது அண்ணாவை இப்படியானதொரு பெண் எப்படி விரும்பக்கூடும். அதிலும் ஒரு தமிழ் பெண். அவளுக்குப் புரியவில்லை. இருந்தாலும் அப்படி நடந்தால் எவ்வளவு நல்லது என எண்ணாதிருக்கவும் அவளால் முடியவில்லை. தவிரவும் அவங்க அண்ணாவின் மனைவி போல இருக்காங்க. நிலு வேற அவங்களை அம்மா என்கிறா. பாசமா இருக்கிறா. அண்ணா மனசு மாறி அவங்கள கலியாணம் கட்டினா நல்லது என்றெல்லாம் ஆசைப்பட்டாள் நேத்ரா. அவள் அனுபவமில்லாத சிறு பெண். அவளால் அப்படித்தான் சிந்திக்க முடியும்.

**(கதை தொடரும்....)**

# அஞ்சலி



13.09.2011 அன்று அம்பாறை மாவட்டம், தம்பிலுவிலில் காலமானான மூத்த ஊடகவியலாளர் அமரர். **திரு.நடராஜா தர்மலிங்கம்** அவர்களுக்கு **'செங்கதிர்'** இன் அஞ்சலி!

**25.07.1933 - 13.09.2011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டுங்கள் மேளத்தை

முதுகு சொறிவதிலும், முகத்துதி சொல்வதிலும்
காக்காய் பிடித்து, காரியத்தை வெல்வதிலும்,
இலக்கிய உலகத்தில்,
எனக்கு நிகர் எவருண்டு?
என்னுடைய படைப்புக்கள்
எதுவாக இருந்தாலும்,
அவைகளையெல்லாம் ஆழமென்று சொல்லி,
போற்றிப் புகழ்வதற்கும், புதுமையென்று சொல்வதற்கும்
பேர்போன கல்விமான்கள், பத்திரிகை ஆசான்கள்
எல்லோரும் என்கையில், இருப்பதினால் இன்று நான்,
சாகித்திய மண்டலத்தால்,
தரம் கண்ட படைப்பாளி,
பொன்னாடை போர்த்தியென்னைப்
புகழுங்கள் வானுயர.
இலக்கிய உலகத்தில்
இவையெல்லாம் சகசம்தான்.
பாரதியும், பாரதிதாசனும்,
படைப்பாளி புதுமைப்பித்தனும்,
என் எழுத்துக்கு முன்னாலே, மண்
தூசென்று பேசுங்கள் – இன்று இங்கே
கேட்பதற்கு யாருமில்லை, ஒலிவாங்கி உங்களுக்கே
பெருமைக்காய் முற்போக்கை, வாழ்வில்
பேசிக் கிழிக்கின்ற, குக்கல்கள் நானல்ல.
சித்தாந்தம் பேசி, சீரழிய நானென்ன
முட்டாளா? அல்லது விட்டடில்களா?
ஞானமுள்ள படைப்பாளி,
நானென்று பேசுங்கள்.
வங்கக்கவி தாகூரென்று, என்னை
வாய்குளிரப் புகழுங்கள்.
எத்தனையோ பத்திரிகை, இதழ்களெல்லாம்
எனக்காக இருக்கின்றன. அவை
அத்தனையும் பிரசுரிக்கும், நன்றி செய்யும்.
தட்டுங்கள் மேளத்தை, தடபுடலாய் மேடையிலே,
பொன்னாடை போர்த்திப் புகழுங்கள் வானுயர

எஸ். முத்துமீரான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தழும்பு' (மனதின் காயங்கள்) நாடகம் பற்றியதோர் நோக்கு



சர்வதேச சமாதான நிகழ்வாகக் கடந்த 17.09.2011 சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பு தேவநாயகம் கலையரங்கில் பாரிய அளிக்கையாக **'தழும்பு'** (மனதின் காயங்கள்) எனும் நாடகம் மேடை ஏற்றப்பட்டது.

கடந்த 30 வருட கால யுத்தத்தினால் அநீதியான முறைகளில் தம் உயிரை இழந்து புதைக்கப்பட்டவர்கள், பூமியைப்பிளந்து வெளியே வந்து தம் இறப்புப் பற்றி எண்ணி வருந்துவதாகவும், தமது உயிர் பிரிந்த விதங்களை பார்வையாளருக்குக் கூறுவதாகவும் நாடகம் ஆரம்பமாகின்றது.

பிணங்களாகவே கதை மாந்தர்கள் தோன்றுவதால் மேடையிலும், மண்டபத்திலும் இருள் பரவிக்கிடக்க பயங்கரமான ஒலியுடன் மேடையின் திரை விலகுகின்றது. நாடகம் முழுவதும் இடுகாட்டை (சவக்காலை) தளமாகக் கொண்டிருப்பதால் சிறுவர்களுக்கும் ஒருவித பய உணர்வை ஏற்படுத்தியிருந்தது.



தேவ.அலோசியஸ்

இலங்கையின் பல பாகங்களிலும் ஜாதி, மதம், மொழி, இனம் என்ற பேதமின்றி கொலை செய்யப்பட்ட மனிதர்களின் கதையே **'தழும்பு'** (மனதின் காயங்கள்) நாடகத்தின் மையக்கரு.

உள்நாட்டு யுத்தம் நின்று நாட்டில் அமைதி தற்போது ஏற்பட்டிருந்தாலும் கூட காயத்தினால் உண்டான தழும்பு மாத்திரம் நம்மை விட்டு அகலப் போவதில்லை என்பதை நினைவுபடுத்தி நகர்ந்து செல்கின்ற நாடகமானது இறுதியில், இறந்துபோன தம் உறவுக்காக தந்தையும், மகளும் இடுகாட்டிற்கு(சவக்காலை) வந்து மலர் வைத்து, தீபம் ஏற்றுவதோடு நாடகம் நிறைவிற்கு வர, இறுதியாக இயக்குநரும் நாடக மாந்தர்களும் **'இன்றுள்ள சமாதானம் என்றும் நிலைக்கட்டும்'** என்னும் வாசகத்தை பார்வையாளருக்குக் கூறுவதோடு நிறைவுறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக மாந்தர்களாக க.பரமானந்தம், தி.மதிராஜ், திருச்செந்தூரன், தி.டிவதர்சினி, கே.கிருசாந்தினி, ர.கீர்த்தனா, சு.ரவிசங்கர், ஜீ.கங்காசாயினி, பா.கோபிரமணன் ஆகியோர் நடித்திருந்தனர்.


பா.கோபிரமணன்

**தயாரிப்பு** - (f)பைன் ஆர்ட்ஸ் கழகம்
**இசையமைப்பு** - அ.செல்வகுமார்
**ஒளியமைப்பு** - சி.பிரதீபன்
**மேடை நிர்வாகம்** - ந.ஸ்டலின்
**காட்சியமைப்பு** - ஜீ.காயத்திரி
**ஒப்பனை** - பா.கோபிரமணன்
**வடிவமைப்பு,எழுத்துரு** - தேவ.அலோசியஸ்

போன்றவர்களும் ஏனைய கலைஞர்களாகச் செயல்பட்டு நாடக அளிக்கையினை அரங்கேற்றினர். இந்நாடகத்தினை மீண்டும் ஒரு தடவை பார்ப்பதற்குப் தவறிய சுவைஞர்களுக்காக அரங்கேற்ற ஆவலாய் இருக்கும் மேற்படி கழகத்தினருக்கு அனுசரணை செய்வதற்கு யாரும் முன்வருவார்களாயின் மீண்டும் ஒரு தடவை **'தழும்பு'** (மனதின் காயம்) அரங்கேறுவது திண்ணம்.

## (f)பைன் ஆர்ட்ஸ் கழகம்

1990 களில் 18 அங்கத்தினருடன் ஆரம்பிக்கப்பட்ட கலைக்கழகத்தின் பிரதான செயற்பாடாக நாடக அளிக்கை விளங்கியது. கோயில் சடங்குகளில் அரங்கேற்றப்பட்ட மேற்படி கழகத்தின் நாடகச் செயற்பாடு இளைஞர் கழக நாடகப்போட்டி என்பவற்றில் திறமைகளை வெளிக் கொண்டுவந்த பின்னர், நாடகப் பயிற்சிக்கப்பட்டறைகளில் அங்கத்தவர்களில் சிலர் கலந்து கொண்டு தம்மை நாடகத் துறையில் வளவாளர்களாகவும் உயர்த்திக் கொண்டனர்.

2000ம் ஆண்டில் வடகிழக்கு மாகாண கலைகலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சில் கழகத்தைப் பதிவு செய்து கொண்டனர். கொழும்பு, திருகோணமலை போன்ற பிரதேசங்களிலும் நாடக அளிக்கைகளைச் செய்து அமோக வரவேற்பையும் பெற்றுள்ளனர். மேடை நாடகத்தினையும் கடந்து தொலைக்காட்சி நாடகம், குறும்படம் போன்ற தொழில் நுட்பக் கலைகளிலும் தம்மை வளர்த்துக் கொண்டுள்ள மேற்படி கழகமானது இதுவரை **'பிளவுகள்'**(தொலைகாட்சி நாடகம்), **'கிழக்கு வானம்'** (குறும்படம்), **'முற்றுப்புள்ளி'**(குறும்படம்), **'அம்மா'**(குறும்படம் - மிக விரைவில் வெளியாகவுள்ளது) போன்றவற்றினையும் தயாரித்துள்ளது. அத்தோடு,கழக உறுப்பினர்களில் பலர் 10 வருடங்களுக்கு மேலாக வானொலி நாடகங்களிலும் குரல்கொடுத்து வானொலி நாடக அனுபவங்களையும் பெற்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறைக்கும் வெளியே, கல்விக் கருத்தரங்குகளையும் தொடர்ந்து 2000, 2002 ம் ஆண்டுகளில் க.பொ.த(சா/த) மாணவர்களுக்கு இலவசமாக நடத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அ.செல்வகுமார்

**வெளியீடுகள்**

மேடை நாடகங்கள் - 35
வானொலி நாடகங்கள் - 54
குறும்படங்கள் - 03
தொலைக்காட்சி நாடகம் - 01
நாடகத் தொகுப்பு நூல் - 01

**கிடைத்துள்ள விருதுகள்/பரிசில்கள்**

மேடை நாடகங்களுக்காக மண்முனை வடக்கு பிரதேச மட்டத்தில் 04 முதலிடம் (முத்தமிழ் விழா)

மேடை நாடகங்களுக்காக மாவட்ட மட்டத்தில் 04 தடவைகள் முதலிடம் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்)

மேடை நாடகங்களுக்காக மாகாணமட்டத்தில் 1 தடவை 2ம் இடம் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்)

மேடை நாடகங்களுக்காக தேசிய மட்டத்தில் 14 விருதுகள் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - மஹரகம)

குறும்படத்திற்காக **'தமிழியல் விருது'** (எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்)

சிறந்த தொலைக்காட்சி நாடகத்திற்கான விருது

சிறந்த தொலைக்காட்சி நாடகப் பிரதிக்கான விருது (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்)

இவற்றோடு இன்றும் மூன்று குறும்படத் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் கழகத்தின் அங்கத்தவர்களில் பலர் தலைமைத்துவம், ஆற்றுப்படுத்தல், ஒறிகாமி, ஒப்பனை, அழகுக்கலை, நாடகப்பயிற்சிப் பட்டறை போன்றவற்றில் வளவாளர்களாக பல்வேறு அரச, அரசார்பற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களில் பகுதிநேரமாகப் பணியாற்றியும் வருகின்றனர்.

மட்டக்களப்பில் இருபத்தொரு வருடகால கலைச்சேவையைக் கொண்டு விளங்கும் **(f)பைன் ஆட்ஸ் கழகத்திற்கு** இன்றுவரை எவ்விதமான உதவிகளையும் பெற்றுக் கொடுக்க நன்கொடையாளர்களோ, அரச நிறுவனங்களோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ முன்வராமை பெரும் கவலை தரும் விடயமாகவே உள்ளது.

**(f)பைன் ஆட்ஸ் கழகத்தின் தற்போதைய நிர்வாகக் கட்டமைப்பு**

| | |
|---|---|
| தலைவர் | - திரு.பரமானந்தம் |
| உப.தலைவர் | - திரு.தி.மதிராஜ் |
| செயலாளர் | - செல்வி.தி.டிவதர்சினி |
| உப.செயலாளர் | - திரு.திருச்செந்தூரன் |
| பொருளாளர் | - திரு.சு.ரவிசங்கர் |
| ஆலோசகர்கள் | - திரு.கோபாலகிருஷ்ணன்(செங்கதிரோன்) |
| | திரு.அன்பழகன் குரூஸ் |
| | திரு.சக்திவேல் |
| ஸ்தாபகர் | - திரு.தேவ.அலோசியஸ் |
| தொடர்பாடல் | - திரு.பா.கோபிரமணன் |

# வாழ்த்து



*01.10.2011 அன்று அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்து பவளவிழாக் காணும் இலங்கையின் முதுபெரும் எழுத்தாளர் - திறனாய்வாளர் - ஊடகவியலாளர் - பத்தி எழுத்தாளர், சிறந்த சினிமா விமர்சகர் திரு.கே.எஸ்.சிவகுமாரன் அவர்களைச் 'செங்கதிர்' வாஞ்சையுடன் வாழ்த்தி மகிழ்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் ஒன்றியம்

பெரிய பிரித்தானியா

இலங்கை – இணுவிலின் மைந்தனும்

முற்போக்கு எழுத்தாளருமான 'தம்புசிவா' என

அழைக்கப்படுகின்ற திரு.தம்பு சிவசுப்பிரமணியம்

அவர்களுக்கு 'தமிழ்த் தென்றல்'

என்கின்ற கௌரவப் பட்டத்தை 28.08.2011 அன்று

இலண்டன் சிவன்கோவிலில் நடைபெற்ற நூல் வெளியீட்டு

விழாவில் வழங்கிக் கௌரவித்தது



Inuvill Onrium - U.K
18 waverly Gardens
Barkingside, llford, Essex LG6 1PJ
United Kingdom.

தம்புசிவா அவர்களைச் 'செங்கதிர்' வாழ்த்தி

மகிழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்!

**07.09.2011 அன்று கொழும்பு - 07 இல் ஜே.ஆர்.ஜயவர்த்தன கேந்திரத்தில் நடைபெற்ற 'கொடகே தேசிய சாகித்திய விருது விழா-2011' இல் விருது பெற்ற பின்வரும் தமிழ்ப் படைப்பாளிகளைச் 'செங்கதிர்' வாழ்த்தி மகிழ்கிறது.**



வாழ்நாள் சாதனையாளர் விருது - தமிழ் இலக்கியம்
**தெளிவத்தை யோசப்**



'பனிநிலவு' - நாவல்
**வவுனியூர் இரா.உதயணன் (லண்டன்)**



'தழவாடி வீதி' - கவிதை
**கந்தையா கணேசமூர்த்தி**



'ஒடுக்கப்பட்டவர்கள்' - சிறுகதை
**தெணியான்**

புதிய ஆக்கத்திறமைக்கான கொடகே விருது 'வாழ்தல் மீதான வன்முறைகள்'
**காத்தநகர் முகைதீன் சாலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாமித்திர பக்கம்

## முன்னீடு

கடந்தமாதம் வெளியான **'செங்கதிர்'** இதழில் விசுவாமித்திரனின் தலைக்குள் இரண்டு பிரச்சினைகள் இருப்பதாகச் சொன்ன ஞாபகம். அதைச் சொல்லிவிட்டு நிம்மதியாக நித்திரை செய்தபோதுதான் இப்பொழுது இன்னும் இரண்டு பிரச்சினைகள் தலைக்குள் வந்து குந்திக் கொண்டு யோகத்தைத் தடைசெய்கின்றன. இரண்டாம் விசுவாமித்திரன் போன மாதம் இரண்டு பிரச்சினைகள் இந்த மாதம் இரண்டு பிரச்சினைகள் என விசுவாமித்திரனுக்கு எல்லாமே இரண்டாகத் தெரிகிறது எனக் குழப்பி விடாதீர்கள். விசுவாமித்திரன்கள் குழப்பவும்மாட்டார்கள் குழம்பவும் மாட்டார்கள் என்பதுதான் எங்கள் ஆச்சிரமச் செப்பேட்டில் எழுதப்பட்டிருக்கும் செய்தி.

இனி விடயத்துக்கு வருவோம். நமது ஆக்க இலக்கியக்காரர்களுக்கு நாவல் எழுதப்பயம் போலும். ஒரு சிலர் மட்டும்தான் எழுதுகிறார்கள். அண்மையில் செங்கதிரோனுக்கு "நல்லதொரு நாவல். வாசியுங்கள்" என்று சொல்லி **'நட்டுமை'** என்ற நாவலை அனுப்பி வைத்தேன். அவர் பதிலுக்கு **'விடியலைத் தேடி'** என்ற இன்னுமொரு நல்ல நாவலை எனக்கு அனுப்பி வைத்தார்.

விசுவாமித்திர பீடிகையோடு விடயத்துக்கு வருவோம்.
பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் தனது மாணவர்களிடம் அடிக்கடி சொன்ன விடயங்களில் நாவல் பற்றிச் சொன்னதும் அடக்கம். "என்னதான் நமது எழுத்தாளர்கள் நாவல் எழுதினாலும் அவை எதுவுமே நாவலுக்கான சர்வதேச தரத்தை எட்டவில்லை", போராசிரியரின் இந்தக் கூற்றுப்பற்றி நமது எழுத்தாளர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்? இதுதான் விசுவாமித்திரன் விளக்கம் கோரும் விடயம்.

இனி இரண்டாவது விடயத்தை இறக்கும் பணி
போர்க்கால இலக்கியம் என்று அப்பம் சுடுமாப்போல் 'நாவலைச் சுட்டு' இறக்கும் பணியில் ஈடுபடுவது பற்றிவிசுவாமித்திரன் கவலை கொள்ளான். அடியேனின் கவலையெல்லாம் அவ்வாறு பணி செய்யப் புறப்பட்டவர்கள் ஏன் பேரினவாத யுத்த இம்சைகளை மட்டும் சொல்லத் துணிந்தார்கள். போராளிக் குழுக்களால் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை ஏன் போரியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்திற்குள் கொண்டுவரத் தயங்கினார்கள்? விளக்கம் கோருகிறான் விசுவாமித்திரன்.

உலக ஆச்சிரமங்கள் அனைத்தையும் ஒரே வலையமைப்புக்குள் கொண்டுவரும் முயற்சியில் தீவிரமான பணியில் ஈடுபட்டிருக்கும் விசுவாமித்திரன் செங்கதிரோனின் நெருக்குவாரம் தாங்க முடியாமல்தான் உங்களைச் சந்திக்கிறான் என்பது விசுவாமித்திர இரகசியம்.

# நோக்கல்




**நூல் – 'விடியலைத் தேடி'**
**ஆக்கியோன் – செங்கை ஆழியான்.**
**வகுதி – நாவல்.**



ஆக்க இலக்கியக்காரர்கள் அரசியல் அஞ்ஞாதவாசம் புரிய வேண்டும் என்று கோட்பாடுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் இலக்கியமும் சினிமாவும் அரசியலைத் தூக்கித் தோளில் போடுவதுமில்லை. கதவுத் துவாரத்தின் ஊடாகத் தரிசிப்பதும் இல்லை என்ற நிலையே காணப்படுகின்றது. ஆனால் நம்மவர்கள் அரசியலைத் தமது ஆக்கங்களுக்குள் கொண்டுவரவே மாட்டார்கள். மிகவும் அரிதாகவே பட்டும்படாமல் அரசியல் நடவடிக்கைகளைத் தங்கள் ஆக்கங்களுக்குள் கொண்டு வருவார்கள்.

இந்தக் கூற்றுக்கு மாறாகச் செங்கை ஆழியான் அவர்கள் **'விடியலைத் தேடி'** என்ற நாவலைச் சமகால அரசியலுடன் தொடர்புபடுத்தி எழுதியுள்ளமை இலங்கையின் புனைகதை ஒழுங்கில் குறிப்பிடத்தக்க மாற்றம் எனலாம்.

தற்கால அரசியலின் சதுரங்க நிலமாகக் கருதப்பட்டது. வன்னிப் பெருநிலமாகும். அங்கு இடம் பெற்ற நாலாம் கட்டப் போரின் நேரடி விளைவுகளில் ஒன்றுதான் மக்கள் இடம்பெயர்வு. இதனை மையமாக வைத்து செங்கை ஆழியான் அவர்களால் **'விடியலைத் தேடி'** என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. இந்திய சுதந்திரப் போராட்டம். பாகிஸ்தான் பிரிவினை வாத எதிர்ப்பு என்பன தமிழ் நாவல்களின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்திருந்தன என வரலாறுகள் சொல்லும் நிலையில் இந்நாவல் மூலம் செங்கை ஆழியான் இலங்கையின் நாவல் வளர்ச்சிக்கு உரமிட்டுள்ளார் எனலாம்.

இந்நாவலை எழுத முனைந்த நோக்கத்தை நாவலாசிரியர் தனது முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **'சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது முன்னைய அரசியல் தலைவர்களான பொன்.இராமநாதன், பொன் அருணாசலம் ஆகிய உயர்தர வர்க்க அரசியல்வாதிகளது இணக்க அரசியலும், அதன்பின் ஜி.ஜி.பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம் ஆகியோரது இணக்க அரசியலும், பிணக்க அரசியலும் அதனைத் தொடர்ந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகிய மத்தியதர வர்க்க குழுவினரின் சாத்வீக அரசியலும்(அஹிம்சை), ஆயுதம் ஏந்திய பிரபாகரன் குழுவினரின் ஆயுதப் போரட்ட அரசியலும், பேரினவாதத்திற்கு எதிராகப் போராடி பூஜ்யமாயின. இன்று மீண்டும் அன்றைய ஆரம்ப கட்டத்திற்கு வந்துள்ளோம். இவற்றை இந்த நாவல் பேசுகிறது. அவர்கள் தூக்கித் தரப்போவதுமில்லை. நாங்கள் பெறப்போவதுமில்லை. நம்பி ஏமாந்த தமிழினத்தின் சோக வரலாற்றை இந்த நாவல் ஆவணப்படுத்துகின்றது.** இந்த முன்னுரைகூட இன மோதல்களுக்கான போராட்டத்தின் காலகட்டத்தைக் கட்டம் போட்டுக் காட்டுகின்றது.

(02)

'செங்கை ஆழியான்' எனவே நன்கு அறியப்பட்ட க.குணராசா அவர்கள் இலக்கிய உலகினருக்கு நன்கு பரிச்சயமானவர். இந்த இலக்கிய உலகினருக்கும் அப்பால் பாடநூல்களை எழுதிக் குவித்ததன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கும் தெரியவந்தவர் அவர். இலங்கை கல்வி நிருவாக சேவையில் முதலாம் தர உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்றவர். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் போன்ற முக்கிய பதவிகளை அலங்கரித்தவர்.

1960 களில் மேற்கிளம்பிய இலக்கியவாதிகளில் ஒருவரான செங்கை ஆழியான் அவர்கள் சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம், சிறுவர் இலக்கியம் எனவாகும் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர். ஏழு தடவைகள் அரச இலக்கிய விருது பெற்றவர். **'சாகித்யரத்னா'** பட்டமும் பெற்றவர். பிரளயம், காட்டாறு, கங்கைக் கரையோரம், மரணங்கள் மலிந்த பூமி, போரே நீ போ, மண்ணின் தாகம், ஜென்மபூமி, ஈழராஜ எல்லாளன், யுத்த பூமி ஆகியன இவர் எழுதிய நாவல்களிற் சிலவாகும். எழுபது வயதைத் தாண்டியநிலையிலும் இன்றுவரை நாற்பத்திமூன்றுக்கு மேற்பட்ட நாவல்களை எழுதிக் குவித்தவர். 2008 இல் வெளிவந்த தமிழ் இலக்கியக் களஞ்சியம் என்ற நூலில் மின்னல்வேக எழுத்தாளர் என இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கமலம் பதிப்பகத்தின் வெளியீடான 'விடியலைத் தேடி' என்ற இச்சிறுஅரசியல் நாவலை அறுபத்தேழு பக்கங்களில் வெளியிட்ட செங்கை ஆழியான் அவர்கள் தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும் பிரான்சில் கொல்லப்பட்டவருமான தன் மருமகன் சபாரெத்தினம் சபாலிங்கனுக்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

(03)

வன்னிப் பெருநிலப்பரப்பில் மாந்தைப் பிரதேசத்தில் பாலி ஆற்றங்கரையில் அமைந்திருந்த அமைதியும் அழகும் நிறைந்த சிறியதொரு கிராமம் சுங்கன் குழியாகும். அம்பலவாணரின் குடும்பத்தோடு அங்கு மொத்தம் எட்டுக் குடும்பங்கள்தான். கிராமத்தலைவன் வழிகாட்டி என எல்லாமே அக்கிராமத்தில் அம்பலவாணர்தான்.

இது நாள் வரையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எது காரணத்திற்காகவும் அங்குள்ள மக்கள் இடம் பெயர்ந்ததே இல்லை. மன்னாரில் இருந்து தரை மார்க்கமாக இராணுவம் முழங்காவில் நோக்கிப் புறப்பட்டிருப்பதாகவும் இடைப்பட்ட கிராம மக்கள் பூநகரிப்பக்கமாக ஓடித்தப்புமாறும் கிடைத்த செய்தியோடுதான் இந்த நாவலின் கதை தொடங்குகிறது.

அம்பலவாணரின் மூத்த புத்திரனின் மகன் சசிகரன் ஒரு தடவை அவனை வெள்ளை வானில் வந்த புலிகள் கடத்திச் செல்ல சசிகரனும் சந்தோசமாக இயக்கத்தில் இணைந்து கொள்கின்றான். இதன் காரணமாக இரண்டாவது புத்திரனின் மகனான தியாகுவை பத்திரப்படுத்தி வளர்க்கின்றனர். ஐந்து வருடங்களுக்குப் பிறகு சசிகரன் இயக்கத்தில் இருந்துவிட்டு வீட்டுக்கு வருவான். வந்தவுடன் அம்பலவாணரின் புத்திரியின் மகளான வசந்தியைக் கட்டிக் கொடுக்கலாம் என்ற செய்தி அம்பலவாணரின் வாயில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததால் தியாகு ஏமாற்றம் அடைகின்றான். காத்திருந்த காலத்தில் தன் காதலை வசந்திக்குத் தெரியப்படுத்தியிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் என எண்ணுகின்றான். ஆனால் வசந்தியின் மனமோ சசிகரனை விரும்புகின்ற அதே வேளை தியாகுவின் மனமும் அவளுக்குப் புரிந்திருந்தது.

அகதியாக தங்கியிருந்த இடத்துக்கு வந்த சசிகரனிடம் வசந்திக்கு தாலி கட்டுமாறு கேட்கின்றனர். உடனடியாகச் சாத்தியமில்லை எனக் கூறும் சசிகரனுக்கு பயிற்சி முகாமில் இருக்கும் மரகதத்தின் மீது ஒரு எண்ணம் இருந்தது. அந்த மரகதத்திற்காக இந்த வசந்தியை இழப்பதற்கு அவன் மனம் இடம் தரவில்லை. ஏமாற்றத்தோடு திரும்புகிறான் சசிகரன் இயக்கத்தில் ஊறிப்போன மரகதம் தனக்குத் திருமண வாழ்க்கை தேவையில்லை எனக் கூறுகிறாள்.

இதே வேளை தியாகுவிற்கு வசந்தியைக் கட்டிக் கொடுக்கும் ஏற்பாடுகள் அகதிமுகாமில் நடைபெறுகின்றன. வசந்தி சசிகரனுக்குத் தகவல் அனுப்புகிறாள். கலியாணத்திற்கு ஒருநாள் மட்டும் இருந்த நிலையில் மரகதத்தின் உதவியோடு வசந்தியைக் கடத்திவந்து சசிகரன் தாலி கட்டுகின்றான். பயிற்சி முகாமில் அடிக்கடி சந்திக்கின்றனர். பின்னர் வசந்தியைப் பெற்றோர் இருக்கும் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கின்றான்.

இடம்பெயர்ந்த மக்கள் நந்திக்கடலைக்கடக்க எத்தனித்துக் கொண்டிருக்கையில் சசிகரன் உட்பட இருபத்தைந்து பேர் கொண்ட புலி உறுப்பினர்கள் சரணடையும் செய்தி வசந்தியையும் உறவினரையும் மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறது. ஆனால் சரணடைந்தவர்களை யாரோ சுட்டுவிட்டதாக அன்று மாலையில் செய்தி கசிந்தது. அம்பலவாணர் கலங்கிப் போனார். சசிகரனின் மரணமும் அதன் காரணமாக வசந்தி தாலி அறுந்து போனதும் அம்பலவாணரை உலுக்கி விட்டது. பிரபாகரனின் மரணம் பற்றியும் கேள்விப்பட்டார். மெனிக் பாமில் இருந்து அம்பலவாணரும் குடும்பத்தினரும் ஒருவாறு வீடு திரும்பினார்கள்.

மீண்டும் சுங்கன் குழிக்கிராமத்தில் வாழ்வு தொடங்குகின்றது. இரண்டாம் தாரமாக வசந்தியைத் தியாகு மணம் செய்வதை பெற்றொர் எதிர்த்தனர். பக்கத்து ஊரில் பட்டிக்காரர் வீட்டுச் சம்மந்தத்தை ஆதரிக்கின்றனர். இதை அறிந்த அம்பலவாணர் வசந்தியையும் தியாகுவையும் கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் எண்ணத்தில் தனது சொத்துக்கள் அனைத்தையும் தியாகுக்கு எழுதிக் கொடுக்கும் நோக்கத்தில் உறுதிக்கட்டோடு வெளியே போகிறார். வழியில் சசிகரனைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். சசிகரன் உயிரோடு இருக்கிறானா? ஏதோ ஒரு வழியில் தப்பி வந்திருக்கிறான். சசிகரனை ஒரு தேநீர்க்கடையில் இருக்கச் செய்துவிட்டு வீடு வந்த அம்பலவாணர் சசிகரன் உயிரோடு இருப்பதைச் சொல்கிறார். மீண்டும் ஏமாற்றுப் பட்டுவிட்ட தியாகு சசிகரனை அழைத்துவரப் புறப்பட்டுப் போவதுடன் நாவல் முடிவடைகின்றது.

(04)

வாழ்க்கை அனுபவங்களையும் மனித அவலங்களையும் நாவல்களாகக் கொண்டு வருதல் என்பது ஒன்றும் இலேசான காரியம் அல்ல. நாற்பதுக்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ள செங்கை ஆழியானுக்கு அது கஸ்டமான காரியமும் அல்ல. இதனை நிறுவும் பாங்கில் தமிழ் புனைகதையுலகிற்கு செங்கை ஆழியான் **'விடியலைத் தேடி'** என்ற நாவலைத் தந்துள்ளார் எனலாம்.

மாந்தை என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள சுங்கன் குழிக்கிராமத்தில் இருந்து நந்திக்கடல் கடந்து மெனிக் பாம் வரை யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களை நாவல் பேசுகின்றது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளினாலும் பிடிவாதமான போக்கினாலும் எத்தனை கஸ்டங்களை எதிர் நோக்க வேண்டி வந்தது என்பது நாவல் முழுவதும் சொல்லப்பட்டுள்ளது. தான் சொல்ல நினைத்ததை மிகவும் தெளிவாக செங்கை ஆழியான் சொல்லியுள்ளார்.

நேர்கோட்டு முறையில் அமைந்த நாவலின் கதைப்பின்னல் மூலம் செங்கை ஆழியான் சிரமம் எதுவும் இன்றி வாசகனைத் தன் பின்னாலேயே முடிவுவரை அழைத்துச் செல்வது இந்நாவலின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று.

இந்நாவலின் முக்கிய பாத்திரம் அம்பலவாணர்தான். எல்லா நாவல்களுக்கும் ஒரு முக்கிய பாத்திரம் இருக்கத்தான் செய்யும். ஆனால் இந்நாவலில் உலாவரும் அம்பலவாணர் பூரண ஆளுமை உள்ளவராக வார்ப்புச் செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே சொன்னதைப்போல சுங்கன் கழிக்கிராமத்தின் தலைவனும் அவர்தான் வழிகாட்டியும் அவர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கு அப்பால் நாவலில் அவர் குணப்பண்புகள் மிகவும் தெளிவாகத் தெரியும் பாங்கில் செய்கை ஆழியான் மொழிநடையைக் கையாண்டுள்ளார்.

**"ஆரும் பதட்டப்பட வேண்டாம். போன இடத்தில் காய்ச்சிக் குடிக்க அரிசியாவது தேவை. எடுத்து வையுங்க. கனசாமான் வேணாம். தூக்கக்கூடியளவு மாற்று உடுப்புக்கள் போதும். அவ்வளவுதான். ஆயத்தமாக எடுத்து வையுங்க. எல்லாரும் வந்து கூடியதும் போவம். அந்தரப்படாமல் போவம். ஏன் தியாகு பொடியள் என்னவாம்..?"** இடம்பெயரத் தெடங்கிய போது அம்பவலவாணரின் இந்தக் குரல் அவரின் ஆளுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு. **"பார்ப்பம். பார்ப்பம். இவ்வளவு காலமும் சுங்கன்குழி இடம்பெயர்ந்தது இல்லை. இடம்பெயர வைச்சிட்டியள்..... எங்க போய் முடியுதோ?"** என்று அம்பலவாணர் பொருமினார்.

இப்படியாக நாவல் முழுவதும் நல்ல குணப்பண்புகளைத் தரிசிக்கச் செய்ததன் மூலம் அம்பலவாணர் ஊடாக தன் கருத்தினைச் செப்பமாக வாசகனுக்குச் 'சேலைன்' பாய்ச்சியுள்ளார். இதன் மூலம் செங்கை ஆழியான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டார் எனலாம்.

அம்பலவாணரின் இரண்டாவது புத்திரனின் மகன் தியாகராசன் அல்லது தியாகு இவர் நாவலில் உலாவரும் ஏமாற்றங்களின் மொத்த உருவம். அத்தையின் மகளான வசந்தி பற்றிய கற்பனையில் இருந்தபோது ஒன்றுவிட்ட சகோதரனான சசிகரனுக்கும் வசந்திக்கும் திருமணம் என்ற செய்தி கேட்டு முதலாவது ஏமாற்றம். வசந்திக்கும் இவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு தாலி கட்டுவதற்கு முதல்நாள் மணப்பெண் சசிகரனால் கடத்தப்பட்டது இன்னொரு ஏமாற்றம். சசிகரன் சரணடைந்த வேளை சுட்டுக் கொல்லப்பட்டான் என்ற சேதியினால் வசந்தியை இரண்டாம் தாரமாக மணமுடிக்க இருந்தவேளையில் சசிகரன் உயிரோடு திரும்பி வருவதால் மீண்டும் ஏமாற்றம். இந்த நாவலில் இப்படியான நிலையில் ஒரு பாத்திரம் யதார்த்தமாக இருக்கிறது.

பெண் போராளியாக மாறிய மரகதம் தன் தாய் மரணிக்கும்போது கொடுத்த தாலிக்கொடி தனக்கு இனித் தேவைப்படாது என்ற நிலையில் வசந்திக்குக் கட்டுமாறு கொடுப்பதன் ஊடாக சசிகரனின் எண்ணத்தை மறுதலிக்கும் தியாக பாத்திரம். பாராட்டக்கூடிய பாத்திரவார்ப்பு உபாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“எழுத்தாளன் உருவாக்க வேண்டியது ஆளுமையும் மாதிரித் தன்மையும் சிறப்பும் கொண்ட பாத்திரங்ளையேயன்றி தனது ஒலிபெருக்கிகளை அல்ல” என்று வாசித்த ஞாபகம்.**

இப்படியாக ஒலிபெருக்கியல்லாமல் நல்ல நல்ல பாத்திரங்களை நாவலில் உலாவ விட்டுள்ளமை நாவலாசிரியரின் அனுபவ முத்திரையன்றி வேறென்ன?

சுங்கன்குழி கிராமத்துச் சமூகம் பற்றி நாவலில் விளக்கம் கிடைப்பது வாசகனுக்கு நாவல் மீதான ஈர்ப்பை அதிகரிக்கின்றது.

**‘பாலியாற்றின் முடிவில் இக்கிராமம் இருக்கிறது. ஆடு மாடுகள் ஏராளம். சிறியளவில் வயல் செய்கிறார்கள். மானாவரித்தரைகள். கிராமத்தை விட்டுப் போவதா? ஆடு மாடுகளை என்ன செய்வது? அவர்கள் வீடுகளில் வளர்கின்ற கோழிகளை என்ன செய்வது? நாய்களை என்ன செய்வது?** என்றும், இன்னுமொரு பந்தியில் **“சனிக்கிழமைகளில் கால்நடையாக கிராமத்திற்கும் கடலுக்கும் இடைப்பட்ட காட்டைக் கடந்து அம்பலவாணர் வந்து கடற்கரையில் தனது குடுப்பத்தினருக்கு தேவையான மீன்களை வாங்கிச் செல்வார்** என்றும், அம்பலவாணரின் மகளான பாக்கியலட்சுமியின் கணவர் வேட்டை நாயுடன் சென்று உடும்பு பிடிக்கும் தொழில் செய்பவர் என்றும் சுங்கன் குழிக் கிராமத்தைப்பற்றிச் சொன்னதன் மூலம் வாசகனுக்குச் சமூகப் பின்புலத்தைத் தேடும் சிரமத்தைச் செங்கை ஆழியான் வைக்கவில்லை என்பது நாவலக்கு நல்ல சேதிதான்.

மாந்தையில் முண்டைப்பிட்டிக்கும் வெள்ளாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பாலியாற்றங்கரையில் அமைந்திருந்த அமைதியும் அழகும் நிறைந்த சிறியதொரு கிராமம்தான் நாவலில் ஆரம்பக் கதைக்களம். அங்கிருந்து செம்மணகுண்டு, பூநகரிச்சந்தை, பரந்தன் சந்தி, முரசுமோட்டைச்சந்தி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, நந்திக்கடல், மெனிக்பாம் முகாம் என மக்களோடு மக்களாக அம்பலவாணரும் குடும்பத்தினரும் நாவலில் விடியலைத்தேடி இடம்பெயர்ந்து கொண்டேயிருந்தனர். அவர்கள் மீண்டும் கிராமம் திரும்பினர். நாவலின் கதைக்களம் மீண்டும் சுங்கன் குழிக்குத் திரும்பியது. திருப்பங்கள் இருப்பதால்தான் நாவல் என்று கருதுவோரும் உள்ளனர். இவர்களைத் திருப்திப்படுத்துமாப்போல மரணமடைந்ததாகக் கருதப்பட்ட சசிகரன் உயிரோடு திரும்பி வருதல், அம்பலவாணர் மயங்கி விழுதல், தியாகுபோய் சசிகரனை அழைத்துவருதல் போன்ற திருப்பங்கள் வளையல்போட்ட கையில் மருதாணி இட்டதுபோல இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலமலக்க (அவசர அவரமாக), முற்றாக்குதல்(திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்தல்), சோறு கொடுப்பித்தல் (திருமணம் செய்து வைத்தல்), பரவாய் பண்ணாத (அலட்டிக் கொள்ளாத) போன்ற சுங்கன்குழிக் கிராமத்துச் சொற்கள் நாவலுக்கு நகை போட்டாற்போல இருந்தது.

சிக்கனம் கொண்ட மொழிநடை, சிக்கல் இல்லாத கதைசொல்லும் பாணி அறுபத்தேழு பக்கங்களுக்குள் நாவல் அடக்கம் என்பனவும் செங்கை ஆழியானின் சிறப்புக்கு அடையாளம்.

சாவும் வாழ்வும் பக்கம் பக்கமாக அமைந்தாலும் சாவதற்காகவே வாழுதல் என்ற தலையெழுத்து இலங்கையில்தான் தமிழ் இனத்தின் மீது எழுதப்பட்டதா? என்று எண்ணும் அளவிற்கு நாவல் தன் பணியைச் செய்துள்ளது. எனினும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகக் குற்றம் காணுதலும் நாவலை நிரப்பியுள்ளது. இது நாவல் ஆசிரியரின் சார்புத்தன்மையா? இல்லையா? என்பது வாசிக்கும் வாசகர்களின் மனத்தளவின் பாற்பட்டது.

அம்பலவாணரின் மூன்றாவது மகள் பாக்கியலெட்சுமி. அவளின் கணவன் மருதநாயகமா? ராசையாவா? பெண்போராளி மரகதத்தின் தாய் யோகம் அக்கா. அவளின் கணவர் யார்? இராசையாவா? பரமநாதனா? ஆரம்பத்தில் ஒன்றும் பின்னர் வேறொன்றுமாக பாக்கியலெட்சுமியினதும் யோகம் அக்காவினதும் கணவன்மாரின் பெயர்கள் இடறுவதற்குக் காரணம் அவசரகோலமா? அனுபவம் வாய்ந்த நாவல் ஆசிரியர் அடி சறுக்க வாய்ப்பில்லை. ஆனாலும் கேள்விக்கென்ன பதில்? விளக்கம் செங்கை ஆழியான் தான் தரவேண்டும்.

கிராமியப் பண்பாட்டுக் கோலங்களும் மண்வாசனைச் சொற்களும் மிகவும் பழமைவாய்ந்த சிறிய கிராமம் ஒன்றில் வாழ்ந்துகொண்டே இந்தநாவலை வாசிக்கின்றோமா என்னும் மனவெழுச்சியை உண்டாக்கும் கதைக்களமும் நாளைய வரலாற்று ஆவணமாக மாறப்போகும் சாத்தியமும் மூப்படையாமல் இன்னமும் இளமையோடிருக்கும் செங்கை ஆழியானின் எழுத்துவினைத்திறனும் நடந்த கதையாகவே நாவலைக் கொண்டு செல்லும் அவரின் கெட்டித்தனமும் தாமதமானாலும் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கும் தைரியமும் என இந்த நாவலுக்காகக் கைதட்டல் வாங்குகிறார் செங்கை ஆழியான்.■

**- இரண்டாம் விசுவாமித்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிடைதோய்தல்

## ஜின்னாஹ் ஷரிபுத்தீன்



மலையக மக்களின் சார்பாக அவர்களில் ஒருவனாக நானிருந்து பாடிய எனது கவிதைகளின் தொகுப்பு **'பனி மலையின் பூபாளம்.'** அந்தத் தொகுதியின் வெளியீட்டு விழா மலையகத்தின் பண்டாரவளையில் நடைபெற்றது. மலை நாட்டைக் கருக்களமாகக் கொண்டு பாடப்பெற்ற அத்தொகுப்பை அம்மண்ணிலேயே வெளியிட வேண்டுமென நான் விரும்பினேன். அதனைப் பண்டாரவளை இந்து மாமன்றம் ஏற்று நடத்தியது. அதன் தலைவர் திரு.நித்தியானந்தனும் கவிஞர் கல்முனைப் பூபால் அவர்களும் விழாவை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தனர். அவ் விழாவில் எனக்குக் **'காவியத் திலகம்'** என்னும் பட்டமும் அளித்துக் கௌரவமும் செய்தனர். அவர்கள் என் நன்றிக்கு உரியவர்கள்.

விழாவின்போது ஒரு அற்புதம் நிகழ்ந்தது. கொழும்பிலிருந்து சென்றிருந்த எங்களுக்கு மட்டுமல்லாது அன்று வந்திருந்த அந்த ஊரவர்களின் வாழ்வில் கூட அது மறக்கமுடியாத ஒரு அனுபவமாகும். பிரதம அதிதியாக பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் பங்கு கொண்டார். விழாத் தலைமை ஊடகவியலாளர் திரு.எழில்வேந்தன் அவர்கள் ஏற்று நடத்தினார்.

விழாவின் தொடக்கத்திற்கான ஆயத்தங்கள் அனைத்தும் முடிந்ததும் தலைவர் ஒலி வாங்கியின் முன் நின்றதுதான் தாமதம் வெளியில் பலத்த சத்தத்துடன் மழை கொட்டியது. மண்டபத்தின் அருகில் இருந்த தகரக் கொட்டகையில்கல்மாரி பொழிவதுபோல் பலத்த சத்தம். கண்ணாடி வழியே பார்த்தவர்கள் கூட்டத்தைக் கவனியாது வெளியைநோக்கி ஓடினர். அப்போதுதான் தெரிந்தது அது பனிக்கட்டி மழையென்று.

பண்டாரவளையின் சரித்திரத்தில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் பனிக்கட்டி மழை பெய்ததாக அறிந்தோம். வந்தவர்கள் அனைவருமே நாம் உட்பட பனிக்கட்டிகளைக் கையேந்தி வாயிலிட்டு மென்றோம். வெள்ளைப் பரல்களாய்க் கொட்டிச் சிதறிய அவைகள் பார்ப்போர் கண்களுக்கு வெண்முத்து தூவல்போல் தோற்றி மகிழச் செய்தன. இது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்வாகும். மறு நாள் பத்திரிகைகளில் அந்த மழை பண்டாரவளையில் இந்த இடத்தில் மட்டுமே பெய்ததாக செய்திபிரசுரித்திருந்தன. நான் அந்தக் காட்சிகளை ஒளிப்பதிவு செய்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை தணிந்ததும் விழா ஆரம்பமானது. தலைமை வகித்த கலைஞர் எழில் வேந்தன் மழையைக் குறிப்பிட்டுப் பேசுகையில் **'பனிமலையின் பூபாளம்'** கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழாவை இறைவன் ஆசீர்வதித்து விட்டார் என்பதன் அடையாளமே இந்தப் பனி மழை என்றார். கவிஞர் நீலாவணனின் பிள்ளையல்லவா? சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அவர் பேசியது அனைவரையும் மகிழ்வுக்குள்ளாக்கியது. இச் சமயத்தில் என் மனக்கண்முன் இந்த நூலுக்குப் பெயர் வைத்த மூத்த எழுத்தாளர் மருதூரக் கொத்தன் அவர்களே முன்னின்றார். அவரின் தீர்க்க தரிசனத்தை எண்ணி நான் வியந்துபோனேன்.

# சூடு



புற்றில் இருந்து வெளியே வந்த ஈசல் - வெளிச்சத்தைத் தன் உடலில் தூக்கிப்பறந்த மின்மினியைப் பார்த்தது.

அதன் அழகைப் புற்றீசலால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'மின்மினியைப்போல் வெளிச்சத்தைத் தூக்கிப் பறக்க என்னாலும் முடியும்....' என்று கூறிக்கொண்டே குடிசையில் எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சத்தைத் தூக்கப் போனது புற்றீசல்.

பாவம்.

ஒரு நொடியில் அது எரிந்து கருகிப் போனது.
குப்பி விளக்கு சொன்னது:-

**"பொறாமை எரிந்து போகும்**
**புற்றீசல் கரிந்து போகும்"**

நன்றி:- **'காசி ஆனந்தன் கதைகள்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளாசல் வீரக்குட்டி



**மிதுனன்**

என்ன சீதேவி காலம்புறையே பேப்பரும் கையுமாக ஓடி வாறா? ஓ! மெய்தான் வாசிப்பு மாதமெலுவா இது! கொண்டு போய் நல்லாவாசி. அப்பதான் நல்ல நல்ல யோசினையெல்லாம் வரும்.

என்ன வேலைக்குப் போற புள்ளைக்கு சோத்துப் பார்சல் கட்டுறதுக்கு கடையில வாங்கித்துப் போறயா?

நானும் நினைச்சன் இந்த வாசிப்பு மாதத்தோட நம்மட சனங்களுக்கு நல்ல யோசின வந்திருக்கெண்டு? கிழிஞ்சிது போ! நீங்க ஒரு நாளும் திருந்த மாட்டயள்.

ஊரூரா கிராமம் கிராமமா வேல மினக்கெட்டு வாசிகசாலைகளைக் கட்டி பேப்பர் புத்தகமெண்டு கொண்டு வந்து அடுக்கி வெச்சிருக்கிறாங்க நம்மட மாநகர சபையாக்கள். நீங்க என்னடாண்டா அதுக்குள்ள போயிருந்து ஒண்டையும் தூக்கி விரிச்சிப் பாக்கிறமாதிரித் தெரியல்லயே.

சும்மா றோட்டு றோட்டாச் சுத்தித் திரியிற பொடிகளாவது அங்க போய் நாளாந்தப் பத்திரிகையையாவது தூக்கி வெச்சி வாசிக்கிறத ஒரு நாளும் என்ட கண் மாணிக்கத்தால பாக்கல்லையே! அப்ப எப்பிடிராம்பி ஊர் நடப்புத் தெரியும். உலகம் எங்கபோகுதெண்டு புரியும்.

அவனினவன் சொல்லுறதக் கேட்டுக் கொண்டே காலத்த கடத்திக் கொண்டு திரியிறயள். வாசிக்கிறதால எவ்வளவு நன்ம இருக்கெண்டு நீங்க அறியிறதுக்கிடையில உலகம் அழிஞ்சு பொயித்திரும்போலதான் கிடக்கு.

பள்ளிக்குப் போய்ப் படிக்காத சனங்களைத்தான் உடுவம். ஓ. எல், ஏ.எல்லெண்டு படிக்கிற புள்ளயளாச்சும் லீவு நாளையில வாசிகசாலைக்குள்ள போயிருந்து படிக்கலாமே.

சமயம் சுகாதாரம் பொருளாதாரம் இலக்கியமெண்டு எவ்வளவத்தான் நம்மட படிச்சவங்கெல்லாம் எழுதிவச்சிருங்காங்க. சைக்! நீட்டுக்கும் நம்மட சமூகம் முட்டாள்களாக வாழ்ந்து பழக்கப்பட்டுப்பொயித்து. இந்த பழக்கத்த நம்மட இளஞ்சமூகமாவது மாத்தி வெச்சா என்ன? சரி சரி இந்த மாசத்தில இருந்தாவது வாசிப்புப் பழக்கத்த பழக்கியெடுங்க. அதுக்குப்புறகு நாமளும் நம்மட சமூகமும் எப்பிடி முன்னுக்கு வருகுதெண்டு இருந்து பாருங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பக்கம்




உங்களது சிற்றிதழ் 4 வது ஆண்டில் நடந்து கொண்டிருப்பது மகிழ்ச்சியை அளிக்கின்றது. வைகாசி இதழில் எனது 'கிழக்கின் போக்குவரத்து' எனும் கட்டுரைக்கும் விசுவாமித்திர பக்கத்தின் நோக்கலில் 'அறிவாக்கங்கள்' நூலின் அறிமுகத்துக்கும் சிறப்பான இடம் வழங்கியுள்ளமைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதே போன்று 'கிழக்கின் சூறாவளிகள்' எனும் கட்டுரையொன்றுண்டு. அதையும் அனுப்பி வைக்கிறேன். உங்களது ஊரான காரைதீவினதும், எனது ஊரான சாய்ந்தமருதுவினதும் ஒரு காலத்தைய அந்நியோன்யத்தை நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. அத்தகையதொரு நிலை மீண்டும் வரவேண்டுமென ஏங்குவதுண்டு. சில மாதங்களுக்கு முன் ஊருக்குப் போயிருந்தபோது அப்பிரதேச முஸ்லீம் - தமிழ் நல்லுறவு சுமுகமாகிவருவதைக் காணச் சந்தோசமாயிருந்தது.

தற்போது எனது சுயவரலாற்றினை எழுதிக் கொண்டிருக்கிறேன். காரைதீவு இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்ற காலத்தைப் பற்றிய பகுதியை விரைவில் உங்களுக்கு அனுப்புகிறேன்.

S.H.Mohammed Jameel
44A ,Asiri Mawatha,
Kalubowila,
Dehiwela.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘செங்கதிர்’
ஆண்டுச் சந்தா :
ரூ 1000/-க்குக்
குறையாத இயன்ற
அன்பளிப்பு

✯ **“செங்கதிர்”** இன் வரவுக்கும் வளர்ச்சிக்கும் அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலம் விரும்பிகள் (உதவும் கரங்கள்) தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் நேரில் வழங்கலாம்.

**அல்லது**

✯ மக்கள் வங்கி (நகரக்கிளை), மட்டக்களப்பு, நடைமுறைக் கணக்கு இல : 113100138588996 க்கு வைப்பிலிடலாம்.

**People's Bank (Town Branch) Batticaloa.**

**Current account No.: 113100138588996 - For bank deposit**

**அல்லது**


✯ அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பில் மாற்றக் கூடியவாறு காசுக்கட்டளை அனுப்பலாம்.

**Post Office, Batticaloa - For money orders**

✯ காசோலைகள் / காசுக்கட்டளைகளை த.கோபாலகிருஸ்ணன் எனப் பெயரிடுக. **Cheques / Money orders in Favour of T.Gopalakrishnan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைத்திரள் சுவைத்திரள் சுவைத்திரள் சுவைத்திரள் சுவைத்திரள்




இருளில் இருப்பவன் வெளிச்சத்தில் இருப்பவனை இனம் காண முடியும்.
வெளிச்சத்தில் நிற்பவன் இருளில் நிற்பவனை இனம் காண முடியாது.
இன்று வெளிச்சத்தில் நின்று, வெற்றிக்கொடி நாட்டுகிறது சுவைத்திரள் நகைச்சுவை ஏடு!
37ஆவது இதழ் வெகுவிரைவில் வெளிவர உள்ளது.
வாங்கிப் படியுங்கள்; வாய்விட்டுச் சிரியுங்கள்.

## தொடர்புகள்

திக்கவயல் தர்மன்
15, பெயிலி வீதி,
மட்டக்களப்பு.
உலகத் தொலைபேசி எண்: 077 026 5351

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org